23868

# சின்னத் தேவதைகள்



ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத் தேவதைகள்

சி.க
23868

சிறுவர் கதைகள்

ச. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் சுனாமி சிறுவர் நூல் வெளியீட்டுச் செயற்திட்டத்தில் 2005/2006 அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை யின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

## நூல் விவரப் பட்டியல்


| | |
|---|---|
| நூல் | : சின்னத்தேவதைகள் |
| வகை | : சிறுவர் இலக்கியம் |
| ஆசிரியர் | : ச. அருளானந்தம் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| ISBN | : 955-1400-00-3 |
| அட்டைப்படமும் ஓவியங்களும் | : ச. அ. அருள்பாஸ்கரன் |
| முதற்பதிப்பு | : 24-01-2006 |
| நூலின் அளவு | : கிறவுண் அளவு |
| எழுத்தின் அளவு | : 16 புள்ளி |
| பக்கம் | : IV +44 |
| கடதாசி | : 70 கிராம் வெள்ளை |
| பிரதி | : 1000 பிரதிகள் |
| வெளியீடு | : அருள் வெளியீடு<br>37/7, மத்தியவீதி,<br>உவர்மலை,<br>திருகோணமலை.<br>தொ.பே.இல. 026-2221507 |
| அச்சகம் | : கிறிப்ஸ் பிரின்டேஸ் பிறைவற் லிமிடெட்<br>70/7, கனல் வீதி, ஹெந்தளை, வத்தளை.<br>060-2194584, 077 7722185 |
| கிடைக்குமிடம் | : லங்கா புத்தகசாலை.<br>F.L.1.14, டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர, கொழும்பு-12. |
| விலை | : ரூபா. 125.00 |


சுனாமியினால் சிதைந்துபோன
பிஞ்சு உள்ளங்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

திரு. ச. அருளானந்தம் அவர்களது சின்னத் தேவதைகள் அற்புதமான கதைகளைக் கொண்ட நூலாகும். அருளானந்தம் அவர்கள் சிறுவர் இலக்கியத்தில் ஆர்வமுடையவர். அவரது படைப்புக்களில் சிறுவர்களது பிரச்சினைகளைத் தொட்டுக்காட்டி, அவற்றுக்கான தீர்வுகளைத் தாமாகவே தீர்த்துக் கொள்ளும் வழிவகைகளையும் விளக்குவார். இந்த நூலில் ஆறு கதைகள் உண்டு. அத்தனையும் சிறுவர்களது துணிச்சலையும், செயற்பாடுகளையும் விளக்குவன. சின்னத் தேவதை என்ற கதையில் சிந்து என்ற சிறுமியின் மூலமாகச் சின்னஞ்சிறிய பிஞ்சுகளின் பொய்க் கோபத்தையும், அந்தக் கோபத்தைத் தாங்களாகவே சிந்தித்துத் தணிக்கும் பக்குவத்தை மைனாக் குஞ்சுகளை உலவவிட்டு விளக்கியுள்ளார். இயற்கையோடு சிறுவர்கள் எவ்வாறு பின்னிப் பிணைந்து தமது கற்றலை விரிவுபடுத்துகிறார்கள் என்பதை இக்கதைகள் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

தொடர்மாடிகளில் வாழும் பிள்ளைகள் அறிந்திருக்க வேண்டிய விடயங்களை நிமேசிக்காவின் துணிச்சல் எடுத்துக் காட்டுகிறது. அணிற்குஞ்சுகளுக்காக இரங்கும் உள்ளங்களைக் காட்டு கிறார். மைனாக்குஞ்சைக் கூண்டில் அடைத்துவிட்டு அது சாப்பிடவில்லை என்பதற்காக அழும் விபூசன், தாய்தந்தையரின் விளக்கத்தின் பின் கூண்டைத் திறந்து சிறைபட்ட குஞ்சை விடுவித்து பழைய இடத்தில் விடுகிறான். பின்னர் பழத்தைக் கொடுக்கிறான். குஞ்சு பழத்தை உண்கிறது. அவன் உள்ளம் துள்ளுகிறது. சுனாமியால் அள்ளுண்டு போனவர்கள் ஏராளம். அவர்களுள் பெண்களும் சிறுவர்களுமே அதிகம். சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள் இன, மத, மொழி பேதமின்றி சகல உயிரினங்களையும் தாக்கியழிப்பதைக் காணுகின்றோம். அவ்வாறு தாக்கத்துக்குள்ளான சிறுவர்கள் ஒன்றாகி வாழ்க்கையில் காணும் வெற்றிகளை 'சுனாமி உறவுகள்' மூலம் கூறுகிறார். இதுதான் யதார்த்தம்.

சிறுவர்களிடையே பேதங்கள் இல்லை. அவற்றை வளர்த்து அழிவை ஏற்படுத்துவது சுயநல மிக்க பெரியவர்கள்தான். சிறுவர்கள் இன, மத, மொழி பேதங்களைக் கடந்தவர்களாக வழிநடத்தப்பட வேண்டும். அதற்கு இவ்வகை நூல்கள் வழிகாட்டும். இந்த நூலினை தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையினர் தேர்ந்தெடுத்து நூலாக்கத்துக்கு மானியமாகச் சிறு தொகையினை உதவியளித்துள்ளார்கள். இவ்வாறு செய்வது பெரும்பேறாகக் கருதுகிறேன். எனது நூலான சங்கீதன் என்ற சிறுவர் நாவலையும் தேர்ந்தெடுத்துள்ளார்கள். தேசிய நூலக ஆவணவாக்கற் சேவைகள் சபையினரின் இப்பணி தொடர வேண்டும். இவ்வகை நூல்களை நமது சிறார்களும், பெரியவர்களும் வாங்கிப் படித்து எழுத்தாளர்களை ஊக்குவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

**க.தங்கராஜா (ஆலையூரன்)**
முன்னாள் கல்விப்பணிப்பாளர்.

4 வது ஒழுங்கை,
உவர்மலை,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது உரை

சிறுவர்கள் என்போர் யார்? இதனையிட்டுப் பலரும் பலவிதமாகக் கூறியுள்ளனர். பிறந்தது முதல் பதினெட்டு வயது வரையுள்ள ஆண், பெண் அனைவரும் சிறுவர்கள் என்ற வரையறைக் குள் அடங்குவர் என சிறுவருக்கான உரிமைப் பட்டயம் கூறுகின்றது. சிறுவர் இலக்கியம் என்பது என்ன? சிறுவர் இலக்கியம் எழுதுவது இலகுவானதா? இவ்வாறான பல வினாக்கள் எழுந்த வண்ணம் உள்ளன. இன்று சிறுவர்கள் பலர் எழுதுகிறார்கள். சிறுவர்களுக்கென்று பல சஞ்சிகைகள் வெளிவருகின்றன. சிறுவர்களுக்காகச் சிறுவர்களே எழுதுவது ஒருவகை. சிறுவர் களுக்காகப் பெரியவர்கள் எழுதுவது ஒருவகை. சிறுவர்களுக்காகப் பெரியவர்கள்தான் அதிகமாக எழுதுகிறார்கள். மேலைநாட்டவர்கள் சிறுவர்களுக்காக நிறையவே எழுதியுள் ளார்கள். சிறுவர்களது சிந்தனா சக்தியைத் தூண்டும் வகையில் இலக்கியங்கள் படைக்கப் பட்டுள்ளன. தேவதைக் கதைகள் (Fairy tales) வாசிப்போரின் மனதை ஈர்ப்பன. வாசிக்கும் கலாசாரத்தைத் தூண்டுவன.

சிறுவர்களது விருப்பு வெறுப்புக்களை அறியவேண்டும். அவர்களது பிரச்சினைகளை இனங் காண வேண்டும். அந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை அவர்களே காணவேண்டும். அதற்கேற்ற துணிவினைச் சுட்டிக்காட்ட வேண்டும். இன்று சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். அவர்களது பிரச்சினைகளை யாரும் கண்டு கொள்வதில்லை. சிறுவர்களை அனைவரும் தங்களைப் போன்ற பெரியவர்களாகவே கருதுகின்றனர். சிறுவர்களது உலகம் தனித்துவமானது. அவர்களது உரிமைகள் ஏராளம். சிறுவர்களது உரிமைகள் சரியாக மதிக்கப்படுகின்றனவா? இவை வினாவுக்குரியன. ஒலிவர் ருவிஸ்ரை சாள்ஸ் டிக்கன்ஸ் எழுதினார். சிறுவர்களது பிரச்சினைகளைப் புடம்போட்டுக் காட்டினார். ஒரு சிறுவன் எதிர் கொண்ட பிரச்சினைகளையும், அவன் கடந்து வந்த பாதைகளையும், கண்ட வெற்றிகளையும் விளக்கினார். அது பெரு வெற்றி யீட்டியது. பாடசாலைகளில் பாடப்புத்தகமாகவும் இருந்தது.

எமது நாட்டுச் சிறுவர்கள் எந்தவகையிலும் சளைத்தவர்கள் இல்லை. அவர்களிடம் துணிச்சலும், எதனையும் சாதித்துப் பார்க்கும் ஆற்றலும் உண்டு. அன்பு, கருணை, இரக்கம், விட்டுக்கொடுக்கும் திறன், சந்தர்ப்பங்களுக்கு ஏற்பச் செயற்படும் அறிவு, சிந்தித்துச் செய லாற்றும் விவேகம், வீரம், சகிப்புத்தன்மை, போன்ற பல்வேறுபட்ட பண்புகள் நமது சிறுவர்களிடம் புதையுண்டு கிடக்கின்றன. எனது அனுபவத்தில் இவை யாவற்றையும் கண்டிருக்கிறேன். அதனால் சிறுவர்களுக்காக எழுதுவதில் இன்பம் காணுகின்றேன்.

சிறுவர் இலக்கியம் படைப்பது இலகுவானது என்று சிலர் கருதுகிறார்கள். பரிசுகள் பெறுவதும் சுலபம் என்றும் எண்ணுகிறார்கள். அது தவறான முடிவாகும். பரிசு பெறும் நூல்கள் எல்லாம் தரமானவை என்று சொல்வதற்கில்லை. அதிர்ஷ்டலாபச் சீட்டுப் போன்றவைதான் நாம் பெறும் பரிசுகள். சிறுவர்களைக் கவர்ந்து அவர்களது பிரச்சினைகளை அவர்களே தீர்க்கக்கூடியதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருக்களைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் நலம். நான் ஆசிரியராகச் சேவையாற்றியமையால் அவர்களது உளவியலைக் கற்றறியும் வாய்ப்புக் கிட்டியது. பல்லாண்டுகளாக கல்விச்சேவையில் இருந்தேன். அதனால் சிறுவர்களது மனதைப் புரியக்கூடிய சந்தர்ப்பங்கள் நிறையவே கிடைத்தன. சிறுவனாகப் பாவனை செய்து அவர்களுடன் சேர்ந்து விருப்பு வெறுப்புக்களைப் புரிந்துகொண்டு எழுதுகிறேன்.

இயற்கையை ரசிப்பதில் சிறுவர்கள் கில்லாடிகள். சூழலைப் புரிந்துகொள்ளும் வல்லமை சிறுவர்களிடம் நிறையவே உண்டு. அவர்களைக் கதாமாந்தராகச் சித்தரிப்பதை பெரிதும் விரும்புகிறார்கள். மாயாஜாலங்களில் மகிழ்கின்றார்கள். ஹரிபொட்டரை விரும்புகிறார்கள். இதற்கெல்லாம் காரணமாக விளம்பரங்கள்தான் இருக்கின்றன. நமது ஊடகங்கள் நம் நாட்டுச் சிறுவர் இலக்கிய கர்த்தாக்களின் நூல்களைப் படித்து நடுநிலையிலிருந்து அவை பற்றிய விமர்சனங்களையும், விளம்பரங்களையும் வெளியிட வேண்டும். சிறுவர்களிடம் அவ்வகையான நூல்கள் சென்றடைவதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும். அப்படிச் செய்யும்போது நல்ல சிறுவர் இலக்கியங்கள் உருவாகும்.

நமது நாட்டில் சுனாமியின் தாக்கம் பெரியதொரு பாதிப்பை ஏற்படுத்தியது. அழிவையும் அவல அனர்த்தங்களையும் தந்தது. உயிரிழந்தவர்கள் பெரும்பாலும் பெண்களும் சிறுவர் களுமே. இந்த அதிர்ச்சியிலிருந்து மீட்சிபெற பல பிரயத்தனங்களைச் செய்யவேண்டும். சிறுவர்களது உள்ளங்கள் களிப்படையவும், வாசிக்கும் கலாசாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத் தோடும் நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை சிறுவருக்கான கையெழுத்துப் பிரதிகளைக் கேட்டிருந்தது. எனது ஆக்கங்கள் தகுதியானவை எனத் தேர்ந்தெடுத்து இந்நூல் வெளிவர உதவிகள் செய்தது. அச்சபையின் செயலாளர் நாயகம், பணிப்பாளர்கள் சபையின் அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றேன். இந்த நூலாக்கத்துக்கு வேண்டிய அட்டைப்படம், உள்ளே இருக்கும் படங்கள் அனைத்தையும் தானே பொறுப்பேற்று வரைந்து தந்து உழைப்பவர் எனது மகன் ச. அ. அருள்பாஸ்கரன். அதனை நினைந்து மகிழ்கி றேன். அர்ப்பணிப்போடு நூலை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைக்குச் சமர்ப்பிப்ப தற்காக அழகாக அச்சாக்கித் தந்த வானவில் அச்சக அதிபர் திரு. சி. சிவபாலன், தம்பி தினேஸ், மற்றும் அலுவலர்களுக்கும் எனது நன்றி. அணிந்துரை தந்துதவிய திரு. க. தங்கராஜா அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. அவர் அமரராகிவிட்டார். அவரது நூலும் இத்தேர்வில் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறது. அவரது மறைவு ஈடிணையற்றது. அந்த ஆத்மாவுக்கு எனது மனமார்ந்த நன்றியினை மனதாரக் கூறுகிறேன். இந்த நூலினை அழகுறப் பதிப்பித்துத் தந்த கிறிப்ஸ் பதிப்பகத்தின் அதிபர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, அவரது துணைவி திருமதி பவானி அவரது உதவியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றி. இந்நூலை வாங்கிப் படிக்கும் உங்கள் அனைவருக்கும் எனது நன்றி.

சிறுவர்களுக்காக எழுதுபவர்களைக் கைதூக்கி விடுங்கள். சிறுவர்களை வாசிக்கும் பழக்கத் துக்கு இட்டுச் செல்வது பெற்றோரினதும், ஆசிரியப் பெருந்தகைகளினதும் கடமையாகும் என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆவன செய்யும்படி அன்பாய் கேட்டுக் கொள்கிறேன்.

**ச. அருளானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


- சின்னத் தேவதைகள் ........................ 1
- மைனாக்குஞ்சு ........................ 11
- அந்த அணிற்குஞ்சுகள் ........................ 17
- நிமேசிக்காவின் துணிச்சல் ........................ 23
- சின்னஞ்சிறுசுகள் ........................ 28
- சுனாமி உறவுகள் ........................ 34




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Trincomalee.

# சின்னத் தேவதைகள்

அவளுக்குக் கோபம் வருவதில்லை. இன்று அது வந்துவிட்டது. கண்கள் சிவந்து விட்டன. அழுகையும் பொத்துக்கொண்டு வந்தது. கண்ணீர் பெருக்கெடுத்தது. தனக்குத்தானே பேசிக் கொண்டாள். "அம்மா ஏசிப் போட்டார். அக்காதான் என்னோடு இரக்கம். அக்கா எட்டியும் பார்க்க வில்லை. அவளும் அம்மாவின் பக்கம்தான்." நினைக்க வேதனையாக இருந்தது. தோட்டத்துக்குள் போனாள். தோட்டம் விரிந்து கிடந்தது. கிணற்றடியில் வாழை மரங்கள். அதனைச் சூழப் பலவகை மரங்கள். பூஞ்செடிகள். மா, பலா, தென்னைகள். யாவும் காற்றில் அசைந்தன. அவளுக்குச் சந்தோசம் இல்லை. அழுகை அழுகையாக வந்தது. மெல்ல இருள் சூழ்ந்து வந்தது.

தென்னைகளில் மைனாக்களின் கும்மாளம். ஒலியெழுப்பிக் கொண்டாடின. கூட்டம் கூட்டமாகச் சேர்ந்தன. விவாதம் நடத்தின. குடும்பச் சண்டைகள் ஒலித்தன. மரத்திலும், கீழேயும் சண்டைகள். சத்தம் ஓய்ந்த பாடில்லை. ஒரே இரைச்சலாக இருந்தது. அவளுக்கு வேடிக்கையாக இருந்தது. தனது கவலையை மறந்துவிட்டாள். அம்மா வெளியில் வந்தார்.

"சிந்து .. நீ.. எங்கே இருக்கிறாய்..?"

அம்மாவின் குரல் ஒலித்தது. சிந்து பேசாது இருந்தாள். செவ்வரத்தை பூத்திருந்தது. அதன் கீழ் இருக்கை இருந்தது. அதில் இருந்து யோசித்தாள்.

"அம்மாவோடும் கோபம். அக்காவோடு மிகக் கோபம். அம்மாவோடு கதைக்க மாட்டேன். அக்காவோடும் பேசமாட்டேன். வீட்டுக்குள்ளும் போக மாட்டேன். அப்பா வரட்டும். பாட்டியும் இல்லை. அவர் எங்கே போனார்"? தனக்குத்தானே பேசிக் கொண்டாள். வைராக்கியமாக இருந்தாள்.

அம்மாவின் குரல் மீண்டும் ஒலித்தது. அம்மாவின் கோபமான குரல்.

"ஏய்..சிந்து ..சாப்பிட வா. இன்னும் ஏழு வயதாகவில்லை. அதற்குள் அவவுக்குக் கோபம்."

சொல்லிவிட்டுச் சென்று விட்டார். சிந்து பேசாது இருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மாவுக்கு வேலை அதிகம். பாவம் அம்மா.."

அம்மாவுக்காக மனம் இரங்கினாள். அக்கா எட்டியும் பார்க்கவில்லை. அக்காமேல் கோபமாக வந்தது.

மைனாக்களின் கூச்சல் காதை அடைத்தது. சண்டைகள் ஓயவில்லை. ஒரு மைனாக் குஞ்சு அவள் முன் நின்றது. மெதுவாகத் தத்தி இருக்கையில் வந்தது. மைனாக்களின் குரல் ஓங்கியது. சத்தம் பலமாக இருந்தது. குஞ்சு இப்போது செவ்வரத்தைக் கிளையில் தாவியது. பூக்கள் நடுவில் குந்தியது. இலைகளால் தன்னை மறைத்தது. மைனாக்களின் கூச்சல் வானை எட்டியது. மைனாக் குஞ்சைப் பார்த்தாள்.

"என்ன .. வீட்டில் பிரச்சனையா"?

அவள் கேட்டாள். மைனாக் குஞ்சு பேசவில்லை. மைனாக் குஞ்சின் கண்கள் மின்னின.

"ஏய்.. நான் கேட்கிறேன். ஏன் பேசாது இருக்கிறாய்? ஏதும் பிரச்சினையா சொல்லேன்?"

அவள் மீண்டும் கேட்டாள்.

" ம் "

மைனாக் குஞ்சு பேசியது.

"என்ன பிரச்சினை. சொல்லு.."

மைனாக்குஞ்சு சுற்றிப் பார்த்தது..

"அம்மா ஏசிப்போட்டார்."

மெதுவாகக் கூறியது.

"ஏன் ஏசினார்.. "

மைனாக் குஞ்சு எதிர்பார்க்கவில்லை. அவளைப் பார்த்தது.

"சொல்லு."

அவள் தொடர்ந்து கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி அடம்பிடித்து அழுதான். சொல்லிப் பார்த்தேன். கேட்கவில்லை. மெல்லத் தட்டிப் போட்டன். அதற்குத்தான் ஏசினார்."

விக்கி விக்கி மைனாக் குஞ்சு கூறியது.

"இதற்காகவா அழுகிறாய். அம்மாதானே ஏசினார். அழாதே. சரி... உன் பெயரென்ன?"?

" சின்னத் தேவதை."

"..நீ வீட்டுக்குப் போகவில்லையா"?

அவள் கேட்டாள். மைனாக் குஞ்சு அவளைப் பார்த்தது. கண்களில் கோபம். முகம் விகாரம் அடைந்தது. சிறகைச் சிலிர்த்து உடலை அசைத்தது. நெஞ்சை நிமிர்த்தியது.

"ஏன் போகவேண்டும். நான் போகமாட்டேன். இங்குதான் இருப்பேன்." வேறுபக்கம் பார்த்துச் சொன்னது. மைனாக்குஞ்சைப் பார்த்தாள். அவளுக்குச் சிரிப்பு வந்தது. சற்று அமைதி நிலவியது.

"யார்மேல் உனக்குக் கோபம்?" சிந்து கேட்டாள்.

"அம்மாமேல்... அக்கா மேலும்தான்". மைனாக்குஞ்சு கூறியது.

மைனாக்களின் இரைச்சல் உக்கிரமடைந்தது. பறந்து பறந்து கூச்சலிட்டன. மரத்திலும் தரையிலும் சண்டை. இரண்டு மூன்றாகச் சேர்ந்தும் சண்டை. கட்டிப் புரண்டன. ஒன்றையொன்று கால்விரல்களால் கொழுவி இருந்தன. அலகால் கொத்திக் கொண்டன.

"ஏன் சண்டை நடக்குது" அவள் கேட்டாள்

"பிள்ளைகள் சொற்கேட்பதில்லை. அது பற்றிய சண்டைதான்." குஞ்சு சொன்னது. மரங்களில் பறவைகளின் ஆட்சி. வேறு சத்தங்களே இல்லை. இப்போது சத்தம் பக்கத்தில் கேட்டது. அங்கே இரண்டு மைனாக்கள். சத்தம் போட்டவாறு கீழே வந்தன. கீச்..பூச்.. என்று சத்தமிட்டன.

"என்ன சத்தம் அது." அவள் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னைக் காணவில்லையாம். அம்மாவும் அப்பாவும் தேடுறார்கள்".

கூறிக் கொண்டு இலைகளுள் மறைந்தது. மைனாக்கள் சுற்றிச் சுற்றி வந்தன. தத்தித் தத்தித் தேடின. தங்களுக்குள் பேசிக் கொண்டன.

"நீதான் அவளுக்கு ஏசினாய்?"

"நீயும்தான் ஏசினாய்."

"அவள் எங்கோ போய்விட்டாள். எங்கு போய் தேடுவது."

"வா வா போய்த் தேடுவோம்." அவை தமக்குள் கிசுகிசுத்தன.

தங்களுக்குள் தர்க்கப்பட்டன. தாய் சத்தமிட்டு அழைத்தது. குஞ்சு பேசாது இருந்தது. தாய் பறந்து பார்த்தது. இலைகளுக்குள் குஞ்சைக் கண்டு கொண்டது. சந்தோசத்தில் பாய்ந்து சென்றது. குஞ்சின் பக்கத்தில் சென்று குந்தியது. தந்தை மைனாவும் சென்றது. ஏதோ பேசிக் கொண்டன. வீட்டுக்கு அழைத்தன. குஞ்சு பேசாது இருந்தது.

தாய் ஒரு புறமிருந்தது. தந்தை ஒருபுறம் இருந்தது. நடுவில் குஞ்சு இருந்தது. மாறி மாறிப் பேசின. குஞ்சு மசியவில்லை.

"சரி..சரி.. அம்மாதானே ஏசினார். அழாதே. வா.. போகலாம்."

தந்தை மைனா அழைத்தது.

"வரமாட்டேன்" குஞ்சு அடம்பிடித்தது.

"பிடிவாதமாக இருக்காதே. தம்பி பாவம்தானே. உன்னைக் காணாமல் அழுகிறான். வா.. போகலாம்." தாய் மைனா கெஞ்சியது.

"மாட்டேன் என்றால் மாட்டேன். நான் சொன்னால் சொன்னதுதான்."

வானத்தை அண்ணார்ந்து பார்த்துக் கூறியது. பின் மெதுவாக வேறு கிளைக்குத் தாவியது. மைனாக்கள் செய்வதறியாது தவித்தன. சிந்துவுக்கு வேடிக்கையாக இருந்தது. இரண்டு மைனாக்கள் புதிதாக வந்தன. தத்தித் தத்தித் தேடின. சுற்றிச் சுற்றிப் பறந்தன. சத்தமிட்டு இரைந்தன. சீட்டி அடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதோ பாட்டி.. பாட்டி.. வந்து விட்டேன். தாத்தாவும் வந்துவிட்டார். எங்கட தங்கம் ஓடி வா" அவை குரல் எழுப்பி அழைத்தன.

குஞ்சு காது கொடுத்துக் கேட்டது.

"எங்கே இருக்கிறாய் .."

"இதோ இங்கே இருக்கிறேன்."

துள்ளி எழுந்தது. பறந்து வந்தது. மைனாக்கள் கீழே நின்றன. அவற்றின் நடுவே புகுந்து கொண்டது. அவை அன்போடு குஞ்சை அணைத்தன. இறக்கைகளைக் கோதி விட்டன. அவற்றின் இறக்கைகளுக்குள் அடைக் கலமானது. அந்தச் சுகத்தில் குஞ்சு மகிழ்ந்தது

"வீட்டுக்குப் போகலாமா"?
அவை அன்போடு அழைத்தன.

"ஓ.. போகலாமே"

குஞ்சு சிரித்துச் சிரித்துக் கூவியது. துள்ளித் துள்ளிக் குதித்தது. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் நிம்மதி. மரத்தை விட்டுக் கீழே வந்தன. சீட்டி அடித்துப் பாடின. குஞ்சின் செயலைச் சிந்து பார்த்தாள். குஞ்சு பாட்டியிடம் ஏதோ கிசுகிசுத்தது. இப்போது குஞ்சு தத்தி நடந்தது. சிந்துவின் முன்னால் வந்தது.

"அக்கா.." என்றது. வியப்போடு சிந்து பார்த்தாள். வீறாப்பாய் பேசிய மைனாக் குஞ்சா இது?

"என்ன."? ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"உங்களுக்கும் அம்மா ஏசினாவா"?
மைனாக் குஞ்சை ஆச்சரியத்தோடு பார்த்தாள். என்ன சொல்வது? யோசித்தாள்.

"சொல்லுங்க கேட்கிறேன்தானே." மீண்டும் கேட்டாள்.

"உங்களுக்கும் அம்மா ஏசினாவா"?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஓம்"

"ஏன்..ஏசினார்கள் .. என்ன செய்தீர்கள்."?

"அக்காவுக்கு ஏசிப்போட்டன்".

"ஏன் ஏசினீர்கள்?"

"விளையாடும்போது பொய் சொன்னார். அளாப்பிப் போட்டார்"

"இதுக்குத்தானா இவ்வளவு கோபம்."

சொல்லிவிட்டுச் சிரித்தது. சிரிப்பை அடக்க முடியவில்லை. உரத்துச் சிரித்தது. சிந்துவுக்கு வெட்கமாக இருந்தது. என்ன செய்வது ?

"ஏய்.. இது உண்மைக் கோபம் இல்லை. பொய்க் கோபம்." சிந்து உரக்கக் கூறினாள்.

" அப்ப சரி. அக்கா.! நீங்க வீட்டுக்குப் போவீங்களா?."

" ஓம் போவேன்." பதில் கூறினாள்.

" சரி அக்கா ..நான் பாட்டியோடு போகிறேன். கோபமா?"

"..சீ.. இல்லை."

" நீங்கள் வீட்டுக்குப் போவீங்கதானே?" மீண்டும் குஞ்சு கேட்டது.

"ஓ.. போவேனே.. அம்மா வருவார். வந்ததும் போவேன்."

"உண்மையாகப் போவீர்கள்தானே?"

"ஓம்.. உண்மையாகப் போவேன். இது சின்னக் கோபம்தானே."

" அதுவரை தனியே என்ன செய்வீர்கள்"?

"இப்போது அப்பா வரும் நேரம்தான். அவர் வந்து விடுவார்."

"அது சரி உன் கோபம் எங்கே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொய்க் கோபம்தானே. நான் சின்னத் தேவதைதானே. சின்னத் தேவதைகளுக்குக் கோபம் வருமா? பொய்க் கோபம்தான் வரும்"

கூறிவிட்டுத் துள்ளியது. பெரிய மைனாவைப் பார்த்தது.

"பாட்டி போகலாமா?" குஞ்சு அவசரப்படுத்தியது. சிறகை விரித்தது.

"அக்கா நான் போய் வருகிறேன்."

"போய் வா".. என்றாள். மைனாக் குஞ்சின் செயல்களைப் பார்த்தாள். பாட்டி மைனா முன்னால் பறந்தது. நடுவில் குஞ்சு சென்றது. பின்னால் தாத்தா மைனா போனது. அம்மாவும் அப்பாவும் சேர்ந்து பறந்தன. அவை போகும்வரை பார்த்தாள். அவை பறந்து மறைந்தன.

இருள் சூழ்ந்து விட்டது. வானில் நட்சத்திரப் பூக்கள். கூனற்பிறை எட்டிப் பார்த்தது. அந்த ஒளி அவள்மேல்பட்டது. அவள் நிலவொளியில் நின்றாள். மின்மினிப் பூச்சிகள் சூழ்ந்துகொண்டன. அவளைச் சுற்றிப் பறந்தன. தேவதைபோல் காட்சி தந்தாள். மெல்லிய காற்று வீசியது. மரஞ்செடிகள் அசைந்தன. அந்த ஓசையில் இசை பரவியது. அவளை விட்டுக் கவலைகள் பறந்தன. கோபம் எங்கோ ஓடிப்போனது. மின்மினிகளோடு சேர்ந்து ஆடினாள். காற்றோடு சேர்ந்து பாடினாள். மரங்களில் பறவைக் கூடுகள். கூட்டிலிருந்த பறவைகளும் வந்து பாடின. சேர்ந்தாடின.

அழகுச் சின்னத் தேவதை
ஆடிப் பாடும் தேவதை
பழக இனிக்கும் தேவதை
பளிங்குச் சிலைபோல் தேவதை.

மின் மினிகள் நடுவிலே
மகிழ்ந்து ஆடும் தேவதை
கண் அழகுத் தேவதை
கள்ளம் இல்லாத் தேவதை.

பாடலுக்கிடையில் அழைப்புக் கேட்டது. அது பாட்டியின் குரல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சிந்து எங்கே இருக்கிறாய்.?”

“இதோ ..இங்கே..பாட்டி.”

“அங்கே ..என்ன செய்கிறாய்..?”

“மின்மினிகளோடு விளையாடுகிறேன் பாட்டி.”

“சரி..அங்கேயே இரு. நான் வருகிறேன்.”

“சரி பாட்டி.”

பாட்டி வந்தார். சிந்துவைக் கண்டதும் பாட்டி மகிழ்ந்தார். சிந்துவைச் சுற்றி மின்மினிகள். அழகிய பறவைக் குஞ்சுகள். பாட்டி சந்தோசப்பட்டார். அம்மாவும் அக்காவும் வந்தார்கள். அம்மாமேல் இருந்த கோபம் பறந்து விட்டது.

“சிந்து வீட்டுக்குப் போகலாமா?” அம்மா கேட்டார்.

“ஓ..போகலாமே.” சொல்லிக் கொண்டு துள்ளினாள். அம்மாவைக் கட்டிப் பிடித்தாள்.

அக்காவும் சிரிப்போடு வந்தாள். “கோபமா சிந்து”. அக்கா கேட்டாள்.

“இல்லையே.” அக்காவைச் சிந்து கட்டிப் பிடித்தாள். அப்பா தேடிக் கொண்டு வந்தார். “என் சின்னத் தேவதையே. ஓடி வா.” என்று சிந்துவைத் தூக்கிக் கொண்டார்.

எல்லோரும் சிரித்து மகிழ்ந்தனர். வீடு கலகலப்பாக இருந்தது. மைனாக் குஞ்சு மரத்தில் இருந்தது. நடப்பதைப் பார்த்தது. மகிழ்ச்சியால் சீட்டி அடித்துப் பாடியது. மற்றப் பறவைகளும் சேர்ந்து கொண்டன. வானில் பறந்து ஆடின. சிந்துவின் குடும்பம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

சின்னச் சின்னத் தேவதை — நாம்
சிரிக்கும் சின்னத் தேவதை.
என்றும் கள்ளம் இல்லை - எம்
இதயம் அன்புப் பொய்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம் வரும் போகும் - அதைக்
கொல்லும் பகையாய் ஏற்கோம்.
பாவம் செய்தலைக் கண்டால் - நாங்கள்
பயந்து ஒழிய மாட்டோம்.

அன்பு கொண்டே வாழ்வோம் - அதை
அறமாய் ஏற்று நடப்போம்.
துன்பம் கண்டால் துடிப்போம் - அதை
துடைக்கும் வழியைத் தொடுப்போம்.

பாடல் காற்றில் கலந்தது. அந்த இரவு இன்பமயமாக இனித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைனாக்குஞ்சு

Library stamp

அன்று விடுமுறை நாள். விபூசன் தனிமையில் இருந்தான். அவன் மூன்றாம் வகுப்பில் கல்வி கற்கிறான். அப்பாவும் அம்மாவும் வெளியில் சென்று விட்டார்கள். வெளியில் செல்லும்போது விபூசனை அழைத்தார்கள். அவன் மறுத்துவிட்டான். அக்கா நிமேசிக்காவும் சினேகிதி வீட்டுக்குச் சென்றுவிட்டாள். பெற்றார் மேல் அவனுக்குக் கொள்ளை அன்பு. அம்மாவைக் காணாவிட்டால் தவிப்பான். அம்மாவைப் பிரிய மனமில்லை. அப்பாவின் அருமை பெரியது. அவர்கள் பக்கத்தில் இல்லாதபோது கவலை அடைந்தான். தனிமை வாட்டியது. மெதுவாகக் கிணற்றடிப் பக்கம் நடந்தான். அங்கு மரஞ்செடிகள் நிறைந்திருந்தன. அவை காய், கனி பூக்களோடு காட்சி தந்தன. அவனது கண்கள் சுழன்றன. பறவைகளின் ஒலி காற்றில் பரவியது. அணிலின் சத்தம் இடைவிட்டு ஒலித்தது. பறவைகள் கூடு கட்டி வாழ்ந்தன. முட்டையிட்டு அடைகாத்தன. குஞ்சு களை அன்பாகப் பாதுகாத்தன. தீன் கொடுத்து வளர்த்தன. பறப்பதற்குக் கற்றுக் கொடுத்தன. இவற்றை எல்லாம் பார்த்தான். ஆனாலும் அம்மா பக்கத்தில் இல்லை. அவனுக்குக் கவலையாக இருந்தது. தனிமை வாட்டியது.

செவ்வரத்தைக் கிளையில் மைனாக்களின் சத்தம். ஒரு மைனாக் குஞ்சைக் கண்டு கொண்டான். அவனது கண்கள் மலர்ந்தன. முகத்தில் சந்தோசத்தின் மின்னல் பளிச்சிட்டது. அது அழகான மைனாக்குஞ்சு. கபில நிறத்தில் வெள்ளைக் கோடுகள். அழகான பிஞ்சுக் கால்கள். தனிமை யில் இருந்தது. சொண்டினால் இறக்கையைக் கோதியது. மெதுவாகச் சீட்டி அடித்தது. தாய்ப் பறவை பக்கத்தில் வந்து இருந்தது. சின்னக் குஞ்சு வாயைத் திறந்தது. வாய்க்குள் இரையைத் திணித்தது. குஞ்சு விழுங்கியது. சின்னச் சிறகை விரித்துச் சிலிர்த்தது. சந்தோசத்தில் விசில் அடித்தது. தாய்ப் பறவை பறந்து போனது. சற்று நேரத்தில் திரும்பி வந்தது. அப்பாப் பறவையும் வந்தது. குஞ்சு வாயைத் திறந்து கத்தியது. தாயின் சொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சின் வாய்க்குள் சென்றது. தாயும் தந்தையும் மாறிமாறி உணவைக் கொடுத்தன. பக்கத்தில் இருந்து சேர்ந்து பேசின. சீட்டி அடித்துப் பாடின.

இந்த உலகம் இனியது
எங்கள் வாழ்வும் இனியது.
சொந்தம் கொண்டு வாழுவோம்.
துயரம் இல்லை ஆடுவோம்.

பூவை மரமும் தந்திடும்.
பூவில் தேனும் ஊறிடும்.
காவில் பழங்கள் தொங்கிடும்
கண்டு மனமும் கூத்திடும்.

கிடைக்கும் உணவை உண்ணுவோம்.
கபடம் பொய்யை வெல்லுவோம்.
தடைகள் எமக்கு இல்லையே
சாதி பேதம் இல்லையே.

பாடிப் பாடி மகிழுவோம்.
பாரில் வெற்றி காணுவோம்.
கூடி வாழ்ந்து காட்டுவோம்.
கொள்ளை இன்பம் காணுவோம்.

அசைந்து அசைந்து ஆடின. சற்று ஓய்வெடுத்தன. அமைதி நிலவியது. பறவைகள் இறக்கைகளை விரித்தன. குஞ்சை விட்டுப் பறந்து போயின. குஞ்சு மட்டும் தனியே இருந்தது. குஞ்சின் இறக்கைகள் வளர்ச்சி அடைய வில்லை. அதற்குப் போதிய பயிற்சி இல்லை. அதனால் அதிகம் பறக்க முடியாது. தத்தித் தத்திக் கிளைகளில் தாவ முயற்சித்தது. முடியவில்லை. அமைதியாக இருந்தது.

விபூசன் மறைந்திருந்து பார்த்தான். அவனுக்குக் குஞ்சின் மேல் ஆசை வந்தது. அடிமேலடி வைத்துப் பதுங்கிச் சென்றான். குஞ்சு உசாரானது. அதனால் பறக்க முடியவில்லை. வேறு ஒரு கிளைக்குத் தாவியது. அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாகப் பிடித்துக் கொண்டான். இருகைகளிலும் ஏந்திக் கொண்டான். தடவி வருடி விட்டான். அதனைக் கொஞ்சினான். குஞ்சு பயந்து நடுங்கியது. அவனிடமிருந்து விடுபட முயற்சித்தது. குஞ்சை எடுத்துக்கொண்டு ஓடினான். வீட்டினுள் பறவைக்கூடு இருந்தது. அதனை எடுத்தான். பறவைக் கூண்டில் குஞ்சை வைத்தான். கூண்டின் கதவை மூடினான். குஞ்சு அலறித் துடித்தது. கூண்டினுள் பாய்ந்து பாய்ந்து தவித்தது. விபூசன் வாழைப் பழத்தை வைத்தான். அது சாப்பிடவில்லை. தண்ணீரை வைத்தான். அது குடிக்கவில்லை. "அழாதே சாப்பிடு". அவன் தொடர்ந்து கூறிக்கொண்டே இருந்தான். குஞ்சு அழுதுகொண்டே இருந்தது. விபூசனுக்கும் கவலையாக இருந்தது. பறவைக் கூண்டைத் தூக்கினான். நடுமண்டபத்தின் தரையில் வைத்தான். கூண்டின் முன் வந்தான். குஞ்சை உற்றுப் பார்த்தான். தரையில் குப்புறப்படுத்துக் கொண்டான். நாடியைக் கைகள் தாங்கியிருந்தன. கண்கள் மைனாக் குஞ்சின் மேல் இருந்தன. மைனாக் குஞ்சும் அழுகிறது. அவன் கண்களிலும் கண்ணீர். அவனுக்குக் கவலை கூடியது.

மைனாக்கள் இரையோடு வந்தன. இருந்த இடத்தில் குஞ்சு இல்லை. குஞ்சைக் காணாமல் பறவைகள் ஓலமிட்டன. தங்கள் மொழியில் சத்தமிட்டு அழைத்தன. குஞ்சின் சத்தமே இல்லை. அவை சுற்றிச் சுற்றித் தேடின. எங்கும் அதனைக் காணவில்லை. பறவைகள் தேடிக் கதறின. விபூசனின் வீட்டுப் பக்கம் வந்தன. வீட்டு வாசலில் இருந்து சத்தமிட்டன. குஞ்சு சத்தத்தைக் காது கொடுத்துக் கேட்டது. தானும் சத்தமிட்டது. குஞ்சு இருக்குமிடத்தை அவை அறிந்து கொண்டன. சுற்றிப் பறந்து பறந்து திரிந்தன. பறவைகள் கூட்டமாய்ச் சேர்ந்து கொண்டன. பறந்து பறந்து சத்தமிட்டன. அவற்றின் இரைச்சல் பலமாக இருந்தது.

விபூசனின் பெற்றோர் வந்தனர். பறவைகளின் இரைச்சலைக் கேட்டனர். அவர்களது மனங்கள் சஞ்சலப்பட்டன. கதவைத் தட்டினார்கள். கதவு தானாகத் திறந்து கொண்டது. விபூசன் கதவுக்குத் தாழ்ப்பாள் போட வில்லை. அவன் கதவைச் சாத்தியிருந்தான். கதவு திறந்து கொண்டது. உள்ளே சென்றனர். அவனைப் பெற்றோர் அவதானித்தனர். அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலையோடு படுத்திருந்தான். அவனது முகம் வாடியிருந்தது. அவன் முன்னால் மைனாக்குஞ்சு. அவனது கண்களில் கண்ணீர். அம்மா பதறிப் போனார். ''என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்''?

அம்மா கேள்விமேல் கேள்வி கேட்டார். விபூசன் மைனாக் குஞ்சைக் காண்பித்தான். "நான் ஆசையோடு பிடித்து வந்தேன். கூண்டில் விட்டுக் காவல் இருந்தேன். அது பிடிவாதம் செய்கிறது. வாழைப்பழம் கொடுத்தேன். அது சாப்பிடவில்லை. எனக்கும் அழுகை வருகிறது". விபூசன் கண்ணீரோடு கூறினான். அம்மா அவனைப் புரிந்துகொண்டார். அவனை அம்மா தூக்கி விட்டார். வெளியில் கூட்டி வந்தார். பறவைகள் பறந்து கதறுவதைக் காட்டினார்.

"விபூசன்! அங்கே பார். அந்தக் குஞ்சின் அப்பாவும் அம்மாவும் அழுகின்றன. குஞ்சைத் தேடிப் பறவைகள் புலம்புகின்றன. குஞ்சு உனது கூண்டில் அடைபட்டுக் கிடக்கிறது. அம்மா அப்பாவைப் பிரிந்து தனியே அழுகிறது. அது சின்னக் குஞ்சு. பாவம் அல்லவா''? அம்மா அன்போடு கூறினார். விபூசன் பறவைகளைப் பார்த்தான். அவை பறந்து பறந்து சத்தமிட்டன. மைனாக் குஞ்சையும் பார்த்தான். அது கூண்டினுள் அழுதுகொண்டு இருந்தது. விபூசன் அமைதியாக யோசித்தான்.

''அம்மாவும் அப்பாவும் தனியே விட்டுப் போனார்கள். எவ்வளவு கவலை எனக்கு? என்னைப் போல்தானே இந்தக் குஞ்சும்''. தனக்குள் சொல்லிக் கொண்டான். வீட்டுக்குள் ஓடினான். பறவைக் கூண்டைத் தூக்கி வந்தான். மைனாக் குஞ்சை ஆசையோடு வெளியில் எடுத்தான். அன்போடு வருடி விட்டான். குஞ்சைப் பிடித்த இடத்துக்குக் கொண்டு போனான். பறவை களும் அவன் பின்னால் பறந்து சென்றன. அப்பாவும் அம்மாவும் கூடவே சென்றனர். மெதுவாகச் செவ்வரத்தைக் கிளையில் விட்டான். குஞ்சு தத்திக் கிளையில் தாவியது. பறவைகள் மகிழ்ச்சியால் ஆரவாரித்தன. அதனைச் சுற்றிப் பறந்து வட்டமிட்டன. குஞ்சைச் சூழ்ந்து கொண்டன. குஞ்சுக்குக் கொள்ளை இன்பம். அதன் தாய் பக்கத்தில் போயிருந்தது. தனது அலகால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சைத் தழுவிக் கொண்டது. தாயின் அணைப்பில் சுகம் கண்டது. அதனை விபூசன் கண்களால் கண்டான். அவனது மனதும் இனித்தது.

விபூசன் வீட்டினுள் ஓடினான். ஓடிய வீச்சில் திரும்பி வந்தான். அவனது கையில் வாழைப்பழம் இருந்தது. பழத்தை எடுத்து உரித்தான். குஞ்சு இருந்த இடத்திலேயே இருந்தது. பழத்தை அதனருகில் வைத்தான். மைனாக் குஞ்சு பயப்படவில்லை. அவன் வைத்த பழத்தைப் பார்த்தது. சிறிய சொண்டினால் எடுத்துச் சுவைத்தது.. மெதுவாக விழுங்கியது. அவனைப் பார்த்துச் சீட்டி அடித்தது. "ஹேய்.. மைனாக்குஞ்சு பழம் சாப்பிடு கிறது." விபூசன் துள்ளிக் குதித்தான். அவனுக்குச் சந்தோசம். அப்பாவும் அம்மாவும் தமது பிள்ளையைப் பாராட்டினார்கள். அக்கா வந்து வேடிக்கை பார்த்தாள்.

இந்த உலகம் இனியது
எங்கள் வாழ்வும் இனியது.
சொந்தம் கொண்டு வாழுவோம்.
துயரம் இல்லை ஆடுவோம்.

விபூசன் வாய் முணுமுணுத்தது. இப்போது மைனாக்குஞ்சு விபூசனின் நண்பனாகி விட்டது. தோட்டத்தில் அவனோடு விளையாடும். சீட்டி அடித்துப் பாட்டுப் பாடும். அவனுக்குத் தனிமை இப்போது இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த அணிற்குஞ்சுகள்

ஆலங்கேணி அழகிய கிராமம். வயல்களும் தோட்டங்களும் நிறைந் திருக்கும். மக்கள் உற்சாகமாக இருப்பார்கள். சுலக்சிக்காவின் வீடு ஆலங்கேணியில்தான் இருக்கிறது. அந்த வீடு அழகானது. திட்டமிட்டுக் கட்டப்பட்டது. வீட்டைச் சுற்றிப் பூந்தோட்டம் உண்டு. கனிதரு மரங்கள் நிறைந்திருக்கும்.

சுலக்சிக்காதான் அந்த வீட்டின் கடைக்குட்டி. அப்பாவினதும் அம்மா வினதும் செல்லப் பிள்ளை. அனைவருக்கும் அவள்தான் செல்லக்குட்டி. அவள் இன்னும் பாடசாலை செல்லவில்லை. அவளுக்கு நான்கு வயதா கிறது. மரஞ்செடி கொடிகளோடு பேசுவாள். பறவைகளோடு கதைப்பாள். பூக்களைப் பறிப்பாள். மாலை கட்டுவாள். சிரட்டைகளைச் சேகரிப்பாள். அவற்றில் சிறுசோறு சமைப்பாள். அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கொடுப்பாள். அண்ணாமாருக்கும் பகிர்ந்து கொடுப்பாள். அவர்கள் வாங்கிக் கொள்ள வேண்டும். சாப்பிடுவதுபோல் பாசாங்கு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் சந்தோசப்படுவாள்.

தென்னைகள் செழித்து வளர்ந்திருந்தன. பாளைகள் விரிந்து சிரித்தன. இளநீர்க் குலைகள் தொங்கின. தேங்காய்கள் முற்றிப் பழுத்திருந்தன. முற்றத்தில் இளந் தென்னை நின்றது. அதன் வட்டுக்குள் அணிற்கூடு தெரிந்தது. அந்தக் கூட்டில் அணிற் குடும்பம் வாழ்ந்தது. அணில்கள் மகிழ்ந்து ஓடித்திரிந்தன. இரண்டு அணிற் குஞ்சுகள் தெரிந்தன. குஞ்சுகள் வெளியில் வந்து எட்டிப் பார்த்தன. அம்மா அணிற்குஞ்சுகளைக் காட்டுவார். அவள் அவற்றைப் பார்ப்பாள். கைகளைக் காட்டி அழைப்பாள். அம்மா உணவை ஊட்டிவிடுவார். அணிற் குஞ்சுகள் பார்த்துக் கொண்டிருக்கும். அவள் உணவை உண்பாள். உணவு முடிந்ததும் அவற்றை அழைப்பாள். அவை மரத்திலிருந்து இறங்கி வருவதில்லை. சுலக்சிக்கா வாழைப் பழத்தைக் காட்டுவாள். நீண்ட நாட்களின் பின் அவை நட்பாகின. சுலக்சிக்காவின் பக்கத்தில் வந்தன. அவளைச் சுற்றி வந்தன. அவள் கைகளில் வாழைப்பழம் இருந்தது. அதனை நீட்டினாள். வாலை உயர்த்திக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தன. பயமில்லாது பழத்தை உண்டன. சுலக்சிக்காவுக்குச் சந்தோசம். அவற்றைத் தொட்டுப் பார்க்க ஆசைதான். ஆனால் அவை பயந்து விடுமே? பார்த்துக்கொண்டே இருப்பாள். அணிற்குஞ்சுகளின் முதுகில் கோடுகள் உண்டு. எப்படி இந்தக் கோடுகள் வந்தன.? அழகான கோடுகள். அவளுக்கு ஆச்சரியம்.

சின்ன அணிற் குஞ்சுகள் - என்
செல்லக் கட்டித் தங்கங்கள்
மென்மை உடல் பளிச்சிடும் - பாய்ந்து
மெல்ல மெல்ல வந்திடும்.

முதுகில் வண்ணக் கோடுகள் - சின்ன
மூக்கின் மேலே மீசைகள்.
மெதுவாய்ப் பதுங்கி வந்திடும் - என்
மேனி எங்கும் ஊர்ந்திடும்.

வாழைப் பழங்கள் வேண்டுமாம் - வந்து
மடியில் தூங்க வேண்டுமாம்.
வாலை ஆட்டும் ஜிம்மிமேல் - ஏறி
வலமும் வர வேண்டுமாம்.

பாடிப் பாடி ஆடுவாள். ஓடியொழிந்து விளையாடுவாள். அணிற்குஞ்சுகள் அவளின் அன்பைப் பெற்று விட்டன. தினமும் வாழைப்பழம் கொடுத்து வந்தாள். அவை அவளருகே செல்லும். அவள் ஆடையில் தொற்றிக் கொள்ளும். கையில் ஏறித் தோள்களுக்குத் தாவும். இறங்கி ஓடிப் போகும். அவள் பின்னால் துரத்துவாள். அவை விரைந்து மரத்தில் ஏறும். மரத்தில் இருந்து சத்தமிடும். சுலக்சிக்கா கைகொட்டிச் சிரிப்பாள். பதிலுக்கு அணிற் குஞ்சுகளும் சிரிப்பது போல் சத்தமிடும். சந்தோசத்தால் துள்ளுவாள். அவள் சந்தோசம் நீடிக்கவில்லை.

சுலக்சிக்கா தனிமையில் இருந்தாள். சாக்குக்கட்டிலை நிழலில் விரித்தாள். தலையணியை எடுத்து வந்தாள். தோளில் கிடந்த துணியைக் கட்டிலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டாள். கட்டிலில் இருந்தாள். அணிற்குஞ்சுகளை அழைத்தாள். அவை இறங்கி வந்தன. அவற்றோடு விளையாடினாள். திடீரென ஒரு காகம் தாவி வந்தது. வீச்சாக இறாஞ்சிக் கொண்டு சென்றது. காகத்தைக் கண்ட குஞ்சுகள் மிரண்டன. அபயக்குரல் எழுப்பி வீரிட்டன. சுலக்சிக்காவின் பக்கத்தில் தடி கிடந்தது. அவளது கவனம் காகத்தில் இருந்தது. தடியை எடுத்து வீசினாள். காகம் பறந்து விட்டது. ஆனால் அணிற் குஞ்சுகளைக் காணவில்லை. அவளுக்குக் கவலை ஏற்பட்டது. தேடினாள். மரத்தைச் சுற்றி வந்தாள். பெரிய அமைதி நிலவியது. அவளுக்கு அழுகை வந்து விட்டது. அழுது கொண்டே இருந்தாள். மரத்தில் பெரிய அணில்களின் சத்தம். அவை பாய்ந்து பாய்ந்து அவதிப்பட்டன. கூக்குரல் எழுப்பின. அவை குஞ்சுகளைத் தேடின. குஞ்சுகளைக் காணவில்லை. பல அணில்கள் கூடிவந்து ஓலமிட்டன.

சுலக்சிக்கா அழுது கொண்டிருந்தாள். அவளது அழுகை நின்றபாடில்லை. அழுகைக்கான காரணம் என்ன? காரணத்தை அறிய முடியவில்லை. கையை மட்டும் மேலே தூக்கிக் காட்டினாள். விக்கி விக்கி அழுதாள். அம்மா துடித்துப் போனார். அப்பாவும் தேற்றிப் பார்த்து அலுத்து விட்டார். அவர்களுக்கு விளங்கவில்லை. ரதீஸ் அண்ணா ஓடிவந்தான். அவளை உற்றுப் பார்த்தான். அவள் கை காட்டிய பக்கம் பார்த்தான். அவனுக்குப் புரிந்து விட்டது.

அணிற்கூட்டில் குஞ்சுகளைக் காணவில்லை. அணில்களின் கூக்குரலை அப்பாவிடம் தெரிவித்தான். அம்மாவுக்குப் புரிந்து விட்டது. அணிற் குஞ்சுகளைத் தேடும் படலம் தொடங்கியது. அழுதழுது சுலக்சிக்காவும் தேடினாள். அவற்றின் சத்தத்தையே காணவில்லை. அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது. காகம் கொண்டு போய்விட்டதாகவே எண்ணினாள். மீண்டும் அழத்தொடங்கி விட்டாள். குஞ்சுகளைக் காணவே இல்லை. எல்லோர் முகத்திலும் கவலை குடிகொண்டது. சுலக்சிக்கா தனிமையில் போயிருந்தாள். கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. ''இனி எப்போது அவற்றைக் காண்பேன்.'' ஏங்கிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் காதுகள் கூர்மையாகின. குஞ்சுகளின் சத்தம் மெதுவாகக் கேட்டது. ஒருமுறைதான் சத்தம் கேட்டது. "சத்தம் எங்கே இருந்து வருகிறது."? அவளது கண்கள் சுழன்றன. "அப்பா! குஞ்சுகளின் சத்தம் கேட்கிறது." அவளது முகம் மலர்ந்தது. "அம்மா! தேடிப் பார்ப்போம். வாருங்கள்." அவள் பம்பரமாகச் சுழன்றாள். அப்பா வீட்டினுள் தேடினார். அம்மா முற்றத்தில் தேடினார். ரதீஸ் சுலக்சிக்காவோடு சேர்ந்து தேடினான். ஆனால் குஞ்சுகளைக் காணவில்லை. அமைதியாக நின்றனர். சுலக்சிக்காவின் பக்கத்தில் சத்தம் கேட்டது. "அண்ணா! பக்கத்தில்தான் கேட்கிறது." துள்ளிக் குதித்தாள்.

"குஞ்சுகள் இருக்கின்றன." அவள் சத்தமிட்டாள். அவளுக்குச் சந்தோசம். அழுகை பறந்து விட்டது. சத்தம் வந்த திசையை இன்னும் காணவில்லை. அவளது மனதில் சந்தேகமும் எழுந்தது. இரண்டு குஞ்சுகளும் இருக்குமா? "கடவுளே எனது குஞ்சுகளைக் காப்பாற்று" மனம் இறைவனை அழைத்தது. "பயப்படாதே. குஞ்சுகள் கிடைத்து விடும்." ரதீஸ் அண்ணா தைரியம் ஊட்டினான். குஞ்சுகளின் சத்தம் மீண்டும் கேட்டது. அந்தச் சத்தம் பக்கத்திலேயே கேட்டது. ரதீஸ் சிரித்துக் கொண்டான். "சுலக்சிக்கா கட்டிலை நன்றாகப் பார்." கட்டிலைச் சுட்டிக் காட்டினான். தலையணையைத் தூக்கினாள். துணியை உதறினாள். குஞ்சுகளைக் காணவில்லை. "அண்ணா குஞ்சுகளைக் காணோமே"? அவளுக்கு அழுகை வந்தது.

அப்பா வந்தார். அவருக்குக் குஞ்சுகள் இருக்குமிடம் தெரிந்து விட்டது. சுலக்சிக்காதான் கண்டுபிடிக்க வேண்டும். அப்போது தான் அவள் சந்தோசப்படுவாள். "சுலக்சிக்கா கட்டிலின் கீழே பார்த்தாயா? ஒருதரம் பார் மகள்" அப்பா கூறினார். ஆர்வத்தோடு குனிந்து பார்த்தாள். அவளுக்குச் சந்தோசம் பொங்கியது. எழுந்து துள்ளினாள். மீண்டும் கட்டிலின் கீழே குனிந்தாள். "அம்மா! இங்கே பாருங்கள். அண்ணா! ஓடிவா. இங்கே பார். என்னுடைய குஞ்சுகள் இருப்பதைப் பார். ஏய் குஞ்சுகளா! என்னை அழ வைத்து விட்டீர்கள். இல்லையா? நான் உங்களோடு கோபம்." சொல்லிக் கொண்டு எழுந்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சரி..சரி.. கோபம் போதும். அவற்றை வெளியில் எடு பார்ப்போம்." அம்மா அன்புக் கட்டளை இட்டார். சுலக்சிக்கா மெதுவாகக் கைகளை நீட்டினாள். வெளியே எடுத்தாள். அவள் கைகளில் குஞ்சுகள் பத்திரமாக இருந்தன. அவற்றைத் தடவி விட்டாள். முத்தமிட்டாள். வாழைப் பழத்தைக் கொடுத்தாள். அவை கடித்து உண்டன. மெதுவாகக் குஞ்சுகளை மரத்தில் விட்டாள். அவை தாவி ஏறின. கூட்டுக்குள் சென்றன. அணில்களின் சத்தமும் ஓய்ந்தது. குஞ்சுகள் கூட்டிலிருந்து எட்டிப் பார்த்தன.

தோழர் நீங்கள் வாருங்கள் - நாம்
துள்ளி மகிழச் சேருங்கள்.
காலம் எல்லாம் ஆடலாம் - நாம்
களித்து ஆடிப் பாடலாம்.

சுலக்சிக்கா மகிழ்ந்து ஆடினாள். சற்றுமுன் இருந்த பிள்ளையா இவள்.? மகளின் செயலை எண்ணிப் பெற்றோர் மெய்சிலிர்த்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிமேசிக்காவின் துணிச்சல்

கொழும்பு இலங்கையின் தலைநகர். மக்கள் தொகையும் அதிகம். அதற்கேற்ப எங்கும் தொடர்மாடிக் கட்டிடங்கள். அது ஏழடுக்கு தொடர்மாடிக் கட்டிடம். மாடிகள் புறாக்கூடுகள் போல் தெரிந்தன. மாடிகளை இணைத்துப் படிக்கட்டுகள் இருந்தன. மின்னுயர்த்தியும் (லிப்ற்) பொருத்தப்பட்டிருந்தது. கட்டிடம் என்றும் பரபரப்பாகவே இருக்கும். சனி, ஞாயிறு, விடுமுறைக் காலங்கள் வரும். அவ்வேளைகளில் கட்டிடம் இரைந்து கொண்டு இருக்கும். வகுப்பேற்றப் பரீட்சை முடிந்து விட்டது. விடுமுறையும் வந்துவிட்டது. பிள்ளைகளின் ஆரவாரம் வானைப் பிளந்தது.

பிள்ளைகள் வீட்டிலிருந்தால் அப்படித்தான் இருக்கும். சேர்ந்து விளையாடு வார்கள். கதைப்பார்கள். திட்டங்கள் தீட்டுவார்கள். செயற்படுத்துவார்கள். அவர்களுக்குக் கவலைகள் இல்லை. ஒரே விளையாட்டுத்தான். பெற்றோ ருக்குத் தான் கவலை. ''சத்தம் போடாதே. புத்தகத்தை எடு. போய்ப் படி.'' இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள். பிள்ளைகள் விளை யாடுவது அவர்களுக்குப் பிடிக்காது. மூன்று மொழிகளிலும் உரையாடல் ஓங்கி ஒலிக்கும். பெற்றோரின் சத்தம்தான் அதிகம் கேட்கும்.

புத்தாண்டும் நெருங்கி விட்டது. துணிமணிகள் எடுப்பது பற்றி உரையா டினார்கள். கூத்தடித்தார்கள். கும்மாளமிட்டார்கள்.பாட்டுப் பாடினார்கள்.

பட்டாசு முழங்கியே காட்டும்.
பட்டாடை சேர்ந்தெமை ஆட்டும்.
சிட்டாகி உள்ளமும் துள்ளும்.
சிரித்துமே புத்தாண்டு கிள்ளும்.

கடலலை பொங்கியே ஆடும்.
காற்றலை தேனிசை பாடும்.
மடலதை மலர்களும் விரிக்கும்.
மகிழ்ந்துமே வண்டுகள் சிரிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் ஒன்றாய்க் கூடி
ஆடுவோம் புத்தாண்டைப் பாடி.
இனியிங்கு துயரங்கள் இல்லை.
இன்பமே வாழ்வதின் எல்லை.

பாடல் முடிந்ததும் சிலர் வீட்டுக்குள் ஓடினார்கள். வீடுகளில் அவர்கள் குரல் ஓங்கியொலித்தது. "எனக்கு ஜீன்ஸ் வேண்டும்." "எனக்குச் சல்வார் வேண்டும்." "எனக்குப் பாவாடை சட்டை வேண்டும்." இப்படி எங்கும் பேச்சுக்கள். சிறுவர்கள் சிலர் கிறிக்கட் விளையாடினர். சிலர் ஒளிந்து விளையாடினார்கள். படிக்கட்டுகளில் ஏறியிறங்கி ஓடினர். சிலர் மின்னுயர்த்தியில் மாடிகளில் உலா வந்தனர். பெற்றோர்கள் தங்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். திடீரென மின்சாரம் துண்டிக்கப்பட்டு விட்டது. அலுத்துக் கொண்டனர். பிள்ளைகள் எங்கே? ஆளையாள் தேடுவதில் உசாராகினர். கீரடிமாரடி என்று சிலர் ஒலியெழுப்பினர். பிள்ளைகளைத் தேடுவதில் பெற்றோர்கள் இறங்கினர். பிள்ளைகளை அழைப்பதில் கட்டிடம் அதிர்ந்தது.

பெரியவர்கள் ஓடித்திரிந்தனர். பிள்ளைகள் தமது வீடுகளுக்கு ஓடினர். வீட்டுக்கு வராத பிள்ளைகளைப் பெற்றார் கூவி அழைத்தனர். வராத பிள்ளைகளைத் தேடும் படலம் தொடங்கியது. பல பெற்றோர்கள் மகிழ்ந்தனர். சில பெற்றோர் கலங்கினர். படிப்படியாகப் பிள்ளைகள் வந்து சேர்ந்தனர். படிக்கட்டுக்களில் ஓடித் திரிந்தவர்கள் வந்து விட்டனர். மின்னுயர்த்தியில் ஓடியவர்கள் வந்தார்கள். ஒரு சிறுமியை மட்டும் காணவில்லை. "எங்கே..? எங்கே.."? வினாவினார்கள். பதில் இல்லை. லிப்றினுள் சிக்கிய சிறுமியை அடையாளம் கண்டனர். அது நிமேசிக்கா தான். லிப்றில் சிக்கிக் கொண்டாள். லிப்ற் நகர மறுத்தது. நிமேசிக்கா மிகவும் தைரியசாலி. விவேகம் உடையவள். மாடிகளுக்கு இடையில் எத்தனை படிக்கட்டுக்கள் இருக்கின்றன? மனதில் கணக்கெடுத்துக் கொண்டே செல்வாள். தனது ஆபத்தை உணர்ந்தாள். அவள் சுறுசுறுப்பானாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னுயர்த்தியினுள் ஒரு மணி இருக்கிறது. மூன்று மொழிகளிலும் அறிவித்தல் தெரிந்தது. அபாய நேரத்தில் அதனை அழுத்த வேண்டும். வெளியில் உள்ளவர்கள் அதை உணரமுடியும். அதனை இயக்கும் முறைகளை அறிந்து இருந்தாள். நிமேசிக்கா தனது மனதைத் திடப் படுத்தினாள். அண்ணன் நிரூசன் வெளியில் நிற்பதை நினைத்தாள். அவன் உதவுவான் என்பதை நம்பினாள். நண்பர்கள் இருப்பதையும் எண்ணி னாள். கைகளால் மணியை அழுத்தினாள். பாதுகாவலரின் அறை மணி ஒலித்தது. பாதுகாவலர் றிசீவரை எடுத்தார். விசாரித்தார். மூன்று மொழி களிலும் கூறினாள். நிரூசன் அறையை நோக்கி ஓடினான். பாதுகாவலரிடம் நிரூசன் விடயத்தைக் கூறினான். றிசீவர் நிரூசன் கைகளுக்கு மாறியது. ''நிமேசிக்கா எங்கே இருக்கிறாய்.''? நிரூசன் குரல் கொடுத்தான். அவன் குரலில் நடுக்கம் தெரிந்தது. ''அண்ணா! நான் மூன்றாம் மாடியில் ஏறினேன். நான்காம் மாடிக்குப் போக இருந்தேன். மின்சாரத் தடை ஏற்பட்டது. காப்பாற்றுங்கள்.'' நிமேசிக்கா இருக்கும் இடம் தெரிந்துவிட்டது. பாதுகாவலர்கள் துரிதமாகச் செயற்பட்டனர். நாலாம் மாடிக்கு ஓடினார்கள். பதறிக் கொண்டு அம்மா ஓடினார்.

மூடியிருந்த லிப்ற் கதவைத் திறந்தனர். கைகளால் லிப்றை இயக்கி னார்கள். லிப்ற் அசைந்தது. மெல்ல மெல்ல லிப்ற் மேலே வந்தது. லிப்ற்றின் மேற்தட்டைத் தூக்கினார்கள். நிமேசிக்காவைத் தூக்கி வெளியில் எடுத்தனர். அவள் வியர்வையில் நனைந்திருந்தாள். புன்சிரிப்போடு வெளியில் வந்தாள். அவளிடம் கேள்விகள் தொடுக்கப்பட்டன. ''நிமேசிக்கா பயந்து போனாயா?'' ''சீச்சீ என்ன பயம்?'' வினாவுக்கு வினாமூலம் பதிலிறுத்தாள். ''எனக்கு அப்பாவும் அம்மாவும் தைரியத்தைத் தந்தார்கள். பயமில்லாது அமைதியாகச் செயற்படப் பழக்கினார்கள். ஆபத்து வேளை களில் எப்படிச் செயற்பட வேண்டும்.? என்ன செய்ய வேண்டும்.? என்று எனது ஆசிரியர்கள் கற்றுக் கொடுத்தார்கள். அவற்றைச் செயல்மூலம் செய்து பார்த்தேன். வெற்றி கிடைத்தது. உங்களால்தான் வெற்றி பெற்றேன். ஆபத்து வேளைகளில் உதவுவதுதான் வீரச் செயலாகும். உங்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றி.'' புன்னகை செய்தாள். கைகூப்பி வணக்கம் சொன்னாள். கூடியிருந்தவர்கள் அவளது துணிச்சலைப் பாராட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா ஓடிவந்து அவளை அணைத்துக் கொண்டார். அங்கிள் வீரசிங்க வந்தார். அன்வர் நாநாவும் வந்தார். அன்று மாலை பெரிய பாராட்டும் நடந்தது. பெற்றோருக்கு விழிப்புணர்வும் ஊட்டப்பட்டது. நிமேசிகாவின் வீரச் செயலை அனைவரும் பாராட்டினார்கள்.

பயங்கொள்ளல் ஆகாது தம்பி – நீ
பதுங்கி ஒதுங்கிடாதே தம்பி.
துயரங்கள் எமை எதிர்த்தாலும் - நாம்
துவண்டு விடலாகாது தம்பி.

நிமேசிக்கா சிரித்துச் சிரித்துப் பாடினாள். அனைவரும் சேர்ந்து பாடி ஆடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறிசுகள்

ரதீபனின் வீடு ஈச்சந்தீவில் இருந்தது. ரதீபனின் அப்பா சிறந்த விவசாயி. அவர்களுக்கு வயலும் உண்டு. வயல் படுகாடு என்ற இடத்தில் இருந்தது. படுகாடு மகாவலி ஓரத்தில் இருந்தது. விடுமுறை நாட்களில் அப்பா ரதீபனை அழைப்பார். அப்பாவோடு ரதீபன் வயலுக்குச் செல்வான். நெற்கதிர்களை வருடி விடுவான். பயிர்களோடு பேசுவான். ஆற்றில் இருந்து நீரிறைப்பான். நீரிறைக்கும் இயந்திரம் இரைந்து கொண்டிருக்கும். அது கால்வாயூடாகப் பாயும். அது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். தனது அனுபவங்களை வகுப்பில் கூறுவான். நண்பர்கள் கேட்டு மெய்மறந்து ரசிப்பார்கள். தங்களையும் கூட்டிச் செல்லுமாறு கேட்பார்கள். அவனும் சம்மதம் தெரிவித்தான். விடுமுறையில் ரதீபனோடு செல்வதற்கு ஆயத்த மானார்கள். அந்த நாளையும் தீர்மானித்தார்கள். அது ஒரு சனிக்கிழமை யாகும்.

சனிக்கிழமை காலை நண்பர்கள் வந்தார்கள். ரதீபனுக்குக் கொண்டாட்டம். தனது தந்தையிடம் இதுபற்றிக் கூறியிருந்தான். அவரும் சம்மதம் தெரிவித்தார். அப்பா முன்னால் நடந்தார். அவரைத் தொடர்ந்து சிறுவர்கள் நடந்தார்கள். அப்பாவோடு பத்துப்பேர் இருந்தனர். பத்து மணிக்கு வயலை அடைந்தனர். வயலில் ராமன் இருந்தார். பிள்ளைகளைக் கண்டதும் சந்தோசமடைந்தார். முதலில் தேநீர் தயாரித்தார். அப்பா பிஸ்கற் கொண்டு வந்தார். அவற்றை ராமனிடம் கொடுத்தார். ராமன் எல்லோருக்கும் பகிர்ந்தளித்தார். பிஸ்கற்றை உண்டனர். தேநீரையும் குடித்தனர். வயலைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டனர்.

வேளாண்மை காற்றில் படபடத்தது. காற்று வீசும். அதற்கேற்ப அலை யலையாய் வேளாண்மை அசையும். கடலலைபோல் வேளாண்மை குனிந்து சுருளும். பின் நிமிர்ந்து எழும். காற்று விளையாடியது. ஒருபுறம் வாழைகள். தென்னைகள். கரும்புத் தோட்டங்கள். காய்கறி வகைகள். காயும் பிஞ்சுகளுமாய் கலகலத்தது. எங்கும் பயிர்களின் ஆட்டம். பார்த்துக் கொண்டே நடந்தார்கள். ராமன் சமையலை முடித்துவிட்டார். சிறுவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலியில் விழுந்து புரண்டார்கள். "நிசோ மகாவலியின் அழகைப் பார். சலசலத்து ஓடுகிறது. அற்புதமான காட்சி." அபிஷேக் கூறினான். அனைவரும் அதன் அழகில் மூழ்கினார்கள். நிமேசிக்கா பாடினாள்.

சலசலத்து மாவலிதான் ஓடுது - இசை
தாளமிட்டு காற்றிலாடிப் பரவுது.
கலகலத்துச் சிற்றலைகள் திரளுது -அதில்
கலந்து மிதந்து அடையல்களும் புரளுது.

கரைகளிலே மரஞ்செடிகள் வளருது - இரையும்
காற்று வீச அவையனைத்தும் பாடுது.
கரைகடந்து வயல்நிலங்கள் கிடக்குது - பயிர்
காய்த்துப் பூத்துக் கலகலத்துச் சிரிக்குது.

பாடிப்பாடி மகிழ்ந்தார்கள். நீந்திக் களைத்தார்கள். நல்ல பசியெடுத்தது. ராமன் அழைத்தார். வாழை இலையில் உணவு காத்திருந்தது. "நல்ல ருசி" கூறிக்கொண்டு உண்டார்கள். விசாலமான மாமரம் காற்றில் அசைந்தது. அதன்கீழ் பாய்களை விரித்தனர். உரையாடல் தொடங்கியது.

வினாக்கள் விரிந்தன. ஆற்றுக்கு அப்பால் காடு. அழகாகச் செழித்திருந்தது. உயர்ந்த மரங்கள் தெரிந்தன. ஏறுகொடிகள் பற்றிப் படர்ந்திருந்தன. மான் மரை கரடி உலா வந்தன. பறவைகளின் கும்மாளம். குயில்கள் கூவின. மயில்கள் அகவின. காட்டுக்கோழிகள் கொக்கரித்தன. குரங்குகளின் அட்டகாசம். மரங்களில் தாவும் ஒலி கேட்டவண்ணம் இருந்தது. எட்டு ஏக்கர் நிலத்தில் வயல் விரிந்திருந்தது. "வயலைச் சுற்றிப் பார்ப்போமா"? நிமேசிக்கா கேட்டாள். "ஹேய்.. நல்ல விசயம். சுற்றிப் பார்ப்போம்." ஏகமனதான குரல்கள் ஒலித்தன. எழுந்து நடந்தார்கள். ஆளுக்கொரு வரம்பில் நின்றனர். வரம்பு வழியே நடந்தார்கள். அவர்களின் சத்தம் வயலின் அமைதியைக் கலைத்தது. வயலின் எல்லையில் வேலி இருந்தது. வேலிக்கு அப்பால் அவர்களது கண்கள் பாய்ந்தன.

வேலிக்கு அப்பால் சிறுபுதர்கள். சென்று பார்க்க ஆசை. துணிந்து சென்றார்கள். நிழல் சுகமாக இருந்தது. வெயிலே தெரியவில்லை. எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தூரம் நடந்தார்கள்? பேச்சு சுவாரசியமாக இருந்தது. போய்க் கொண்டே இருந்தார்கள். வீரைமரங்கள் சிவந்து வரவேற்றன. பசுமையில் செங்கம்பளம் விரித்திருந்தது. இலை தெரியா வண்ணம் பழங்கள். பாய்ந்து கொப்புகளோடு முறித்தெடுத்தனர். நல்ல ருசி. சுவைத்து உண்டார்கள். பாலை மரங்கள் மஞ்சள் போர்த்து இருந்தன. அனுசியன் பாலைமரத்தில் ஏறினான். கொப்புகளை முறித்தான். கீழே போட்டான். ருசியான பாலைப் பழங்கள். ருசித்துச் சாப்பிட்டார்கள். தண்ணீர் விடாய் வந்தது. தண்ணீர் கிடைக்கவில்லை. சுற்றிப் பார்த்தார்கள்.

நிமேசிக்காவின் கண்களில் ஏதோ தென்பட்டது. "அண்ணா அங்கே பாருங்கள்." சுட்டிக் காட்டினாள். ரதீபன் அந்த இடத்தினைப் பார்த்தான். நிலம் சற்று உயர்ந்திருந்தது. புதர்களை நீக்கிப் பார்த்தார்கள். சிதைந்த கட்டிடத்தின் எச்சங்கள். நிமிர்ந்தும் சாய்ந்தும் நிற்கும் தூண்கள். அவற்றின் சித்திர வேலைப்பாடுகளைப் பார்த்தனர். எவ்வாறு இத்தூண்களைச் செய்தார்கள்.? கல்லினால் செய்த உரல்கள். கதவு நிலைகள். சித்திரப் படிக்கட்டுக்கள். தட்டையான ஓடுகள். பழங்காலத்துச் செங்கற்கள். அவை இரண்டு அங்குலத் தடிப்புள்ளவை. ஒன்பதங்குல நீளங் கொண்டவை. "நமது முன்னோரது அற்புதச் செயல்கள் அளப்பரியன. மகாவலியின் இடதுகரை முக்கியமானது. பெரியதொரு நாகரீகம் இங்கிருந்தது. பல குளங்களும் ஊர்களும் இருந்தன. இவை குளக்கோட்டு மன்னனோடு தொடர்புடையன. நமது திருக்கோணேஸ்வரம் இருக்குதல்லவா? அதற்கு நைவேத்தியப் பொருட்கள் இங்கிருந்து சென்றன. இதனை எங்கள் ஆசிரியர் கூறினார். அவர்களுக்கு வரலாற்றை அறிய ஆர்வம். ஆனால் நேரம் போதாது.

"ரதீபன் நாங்கள் எங்கே இருக்கிறோம்."? அனுசியன் கேட்டான். காட்டில் திசை தெரியவில்லை. தண்ணீர்த் தாகம் அதிகரித்தது. களைத்து விட்டனர். மரத்தின் கீழ் குந்திவிட்டனர். குரங்குகள் சூழ்ந்து கொண்டன. பரிதாபமாகப் பார்த்தன. " என்ன பார்க்கிறீர்கள்? எங்களுக்குத் தண்ணீர் வேண்டும். தரமுடியுமா"? நிமேசிக்கா வேடிக்கையாகக் கேட்டாள். சைகை மூலமும் உணர்த்தினாள். குரங்குகள் தமக்குள் ஏதோ குசுகுசுத்தன. சில குரங்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்து ஓடின. இந்தக் குரங்குகள் உதவி செய்யுமா? சந்தேகத்தோடு பார்த்தனர். அவர்களுக்கு ஆச்சரியம். இரண்டு குரங்குகள் குடத்தோடு வந்தன. அது ரதீபனின் வயலில் இருந்த குடம். அதற்குள் தண்ணீர் இருந்தது. குடத்தை வைத்துவிட்டுத் தூரத்தில் நின்றன. தண்ணீரை எடுத்துக் குடித்தனர். அந்தப் பெரிய குரங்கை ரதீபன் கண்டிருக்கிறான். அவனுக்கு நினைவுக்கு வந்தது.

ஒருநாள் அப்பா இளநீர் குடித்தார். கோம்பையைத் தூரத்தே வீசிவிட்டார். அந்தக் கோம்பையில் சிறு துவாரமே இருந்தது. குரங்கு துவாரத்தினுள் கையை நுழைத்தது. ஆனால் வெளியே எடுக்க முடியவில்லை. ராமனைக் கண்டதும் ஓட முனைந்தது. அதனால் முடியவில்லை. கோம்பை மரவேரின் இடுக்கில் கிடந்தது. மரவேர் தடையாகியது. கோம்பை மாட்டிக் கொண்டது. குரங்கினால் விடுபடமுடியவில்லை. வலி தாங்க முடியவில்லை. பயந்து நடுங்கியது. பதறித் துடித்தது. ரதீபன் இதனைக் கண்டு கொண்டான். மெதுவாகச் சென்றான். ''பயப்படாதே நான் உதவி செய்கிறேன். கோம்பையை எடுத்து விடுகிறேன்.'' என்றான். குரங்கு விளங்கிக் கொண்டது. பதறாமல் இருந்தது. கோம்பையின் பக்கமாகச் சென்றான். குரங்கின் தலையைக் கோதினான். அதற்கு வலித்தது. அதன் கையைத் தடவி விட்டான். கோம்பையின் துவாரத்தைப் பெரிதாக்கினான். குரங்கின் கை வெளியில் வந்துவிட்டது. சந்தோசத்தோடு போய்விட்டது. அது ரதீபனின் நண்பனாகி விட்டது. ரதீபன் நண்பர்களுக்கு நடந்ததைக் கூறினான். அவர்கள் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள்.

''நன்றி நண்பா'' ரதீபன் கூறினான். குரங்குகள் சந்தோசத்தில் துள்ளிக் குதித்தன. வழிதவறிவிட்டது. எப்படிப் போவது? நிமேசிக்கா சீசரை நினைத்தாள். வயலில் சீசர்தான் காவல். மிகவும் புத்திக் கூர்மை உடையது. அதனை அழைத்தால் என்ன? இரண்டு கைகளையும் சேர்த்தாள். சுட்டு விரலையும் நடுவிரலையும் பார்த்தாள். நடுவிரல்கள் படும்படியாகப் பிடித்தாள். நான்கு விரல்கள் சேர்ந்திருந்தன. நான்கு விரல்களையும் வாயினுள் நுழைத்தாள். விரல்களால் நாக்கை மடித்தாள். வாயைக் குவித்தாள். காற்றை அழுத்தினாள். ஊதிச் சீட்டி அடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஒலி வெகுதூரம் வரை ஒலித்தது. சற்று நேரத்தில் சீசர் விரைந்து வந்தது. குரங்குகள் சீசரைக் கண்டன. கண்டதும் மரத்தில் ஏறிக் கொண்டன.

நிமேசிக்கா சீசரைத் தடவிவிட்டாள். அது வாலையாட்டிக் குரைத்தது. சீசருக்குக் குரங்குகளைக் காட்டினாள். சீசர் மரத்தைப் பார்த்தது. அதன் செவிகள் குத்திட்டு நின்றன. பின் வாலை ஆட்டிக் கொண்டது. நிலைமை யைப் புரிந்து கொண்டது. "வழி தவறி விட்டோம். போவோமா?" நிமேசிக்கா கூறினாள். சீசர் முன்னால் சென்றது. அது வழிகாட்ட வரிசையாக நடந்தனர். பிள்ளைகளைக் காணாத ராமன் பதற்றமடைந்தார். ராமன் பிள்ளைகளைக் கண்டு கொண்டார். கண்டதும் சந்தோசப்பட்டார். எல்லோரும் வயலை அடைந்தனர். குரங்குகளும் பின்தொடர்ந்தன. விலங்குகள் மிக நல்லவை. அவற்றுக்கும் அறிவு உண்டு. மனிதர்களுக்கு ஆறறிவு உண்டு. அதுதான் பகுத்தறிவு. ஆனால் அதனை மனிதர் மறந்து விடுகின்றனர்.

தேநீர் தயாராய் இருந்தது. பிஸ்கற் பரிமாறப்பட்டது. உண்டார்கள். தேநீரைக் குடித்தார்கள். "சரி புறப்படுவோமா"? அப்பா குரல் கொடுத்தார். புறப்பட ஆயத்தமானார்கள். ராமனுக்கு நன்றி கூறினார்கள். எழுந்து நடந்தனர். வேலியில் குரங்குகள் குந்தியிருந்தன. கைகளை அசைத் தார்கள். அவை வேடிக்கை பார்த்து நின்றன. சீசர் பாதிவழிவரை வந்தது. ராமன் அழைத்தார். வாலை ஆட்டிக் கொண்டு திரும்பியது. ஈச்சந்தீவை அடையும் போது இருட்டிவிட்டது. ரதீபனின் வீடு கலகலத்தது. நண்பர்களின் பயணம் இனித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி உறவுகள்

''டேய் பிரகாஷ்! பந்தை நேரே வீசு.'' வினோத்தின் சத்தம் வானைப் பிளந்தது. பிரகாஷ் குறி வைத்தான். மூச்சை இழுத்துப் பந்தை வீசினான். அது சரியாக துடுப்பை நோக்கி வந்தது. பலம் கொண்ட மட்டும் விநோத் வீசி அடித்தான். துடுப்பின் தாக்கம் பந்தில் பட்டது. பந்து சுழன்று சென்றது. வெகுதூரத்தே போய் விழுந்தது. உருண்ட பந்தைக் கடலலை கழுவி விட்டது. ''ஹேய்...சிக்சர்ஸ்..'' உற்சாகம் வினோத்தைத் துள்ள வைத்தது. அடுத்த பந்தை பிரகாஷ் வீசினான். அது வேகமாகச் சென்றது. வினோத்தின் விக்கற்றைத் தாக்கியது. வினோத் வீழ்த்தப்பட்டான். மாறிமாறி விளையாட்டுத் தொடங்கியது.

காலையில் இருந்தே விளையாடினார்கள். அனைவரும் ஐந்தாம் தரத்தில் கற்பவர்கள். ஆனால் வெவ்வேறு பாடசாலைகளில் கற்பவர்கள். மார்கழி மாதத்தின் மந்தாரம். வெயிலும் மழையும் கலந்த வானிலை. நத்தார் ஊர்களில் உலா வந்தது. அதனைத் தொடர்ந்து கொண்டாடும் சிறுவர்கள். நேற்றுத்தான் நத்தார். அதைக் கொண்டாடிய களைப்பு. அந்தக் களைப் பைப் போக்க கிறிக்கற் ஆட்டம். அதனைக் கொண்டாடும் சிறுவர்களின் ஆர்வம். குழந்தை ஜேசு கோயிலின் பூசை முடிந்தது. அங்கிருந்து பீற்றர் ஓடி வந்தான். பிரகாஷ் கோணேசர் கோயிலிலிருந்து வந்திருந்தான். நசார் தொழுகையினை முடித்ததும் வந்துவிட்டான். நண்பர்கள் ஏராளம். கடற்கரை கலகலத்தது. பாடசாலைகள் தூங்கி வழிந்தன. விடுமுறைக் காலங்களில் அவ்வாறுதான் இருக்கும். சிறுவர்களின் உள்ளம் துள்ளிக் குதிக்கும். புத்தகங்கள் மூலைகளில் ஓய்வெடுக்கும். திருகோணமலையில் வெயில் மந்தகதியில் எறித்தது. கடற்கரை விளையாட்டுத் திடலாக மாறியது. சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

''டேய் சமந்த! இன்றையத் திகதி என்னடா?'' விநோத் பந்தைக் கையில் தேய்த்தவாறு கேட்டான். ''நேற்றுத்தானே இருபத்தைந்தாந் திகதி. நத்தார்.'' பீற்றர் கூறினான். ''மார்கழி இருபத்தைந்துதானே நத்தார். இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு டிசம்பர் இருபத்தாறு. சரியாக காலை எட்டரை மணி" பிரகாஷ் குதூகலத்தோடு கூறினான். "இவன் கொலம்பஸ். அமெரிக்காவைக் கண்டவன் மாதிரி." சமந்த கிண்டலோடு சொன்னான். "டேய் கிண்டல் வேண்டாம். நானும் ஒருநாள் புதுநாடு காணுவேன். மனதிலே வை." பிரகாஷ் கதாநாயகன் பாணியில் கூறினான். "சூ.. இவர் சொன்னால் சொன்னதுதான். பிரமாதம்" சமந்த நக்கலடித்தான். விளையாட்டுச் சூடு பிடித்தது.

அந்த ஞாயிறு வழமைபோல்தான் தெரிந்தது. மக்களும் தங்கள் கடமைகளில் மூழ்கினார்கள். எங்கும் வழமையான ஆரவாரம். தோணிகள் கரையில் குளிர் காய்ந்தன. சில மீனவர்கள் வலையைச் செப்பனிட்டனர். ஒதுக்குப் புறத்தில் நாய்கள் சுருண்டன. நத்தார் வழமைபோல் வந்தது. இன்று மார்கழி இருபத்தாறு. விளையாடுவது சிறுவர்களுக்கு விருப்ப மானது. அதிகாலையில் எழுந்து விடுவார்கள். யாரும் எழுப்பத் தேவை யில்லை. காலை ஏழுமணிக்கே தொடங்கி விட்டார்கள். நேரம் எட்டு மணியைத் தாண்டிவிட்டது. கொழும்பிலிருந்து புகைவண்டி வந்து விட்டது. அதன் விசில் அதனை அறிவித்தது. யாருடைய குரலும் அவர்களுக்கு எட்டவில்லை. அவர்கள் தமது உலகில் மூழ்கியிருந்தனர்.

பேரிரைச்சல் கடற்பக்கமிருந்து வந்தது. அதிசயித்த வண்ணம் மக்கள் பார்த்தார்கள். சிறுவர்கள் கண்டு கொள்ளவில்லை. கோணேசர் மலை யுடன் கடலுக்குப் போட்டி. மலையின் உயரத்தில் பேரலைகள் ஆர்ப்பரித்தன. ஊழிப் பேரலைகள். உருண்டு திரண்டு வாரியணைக்க வந்தன. மக்கள் அலறியபடி ஓடத் தொடங்கினார்கள். எங்கும் அவலக் குரல்கள். அலைகள் கரையைத் தொடும்போதுதான் கண்டார்கள். கரையில் கிடந்த தோணிகளை அலைகள் சாடின. அவைகள் அள்ளுண்டு மேலெழுந்தன. கரையைக் காணவில்லை. "டேய்..ஓடுங்கடா.." யாரோ குரல் கொடுத்தார்கள். அப்போதுதான் ஆபத்தை உணர்ந்தார்கள். தலைதெறிக்க ஓடினார்கள். கால்போன பக்கம் ஓடினார்கள். ஆனால் ஆழிப்பேரலை இடம் கொடுக்கவில்லை. அலைகள் எழுந்து சுருண்டன. மடிந்து தவழ்ந்தன. அகப்பட்ட யாவையும் சுருட்டின. அப்படியே அள்ளிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று விட்டன. பிரகாஷ் என்னவானான்?. விநோத் என்னவானான்?. பீற்றர் எங்கே போனான்?. சமந்த எங்கே போனான்? நசார் எப்படி இருப்பான்? எல்லாம் கனவாகி விட்டன. ஆளுக்கொருபக்கம் அள்ளுண்டு போனார்கள். பிரகாஷை யாரோ தூக்கியெறிந்த உணர்வு. அவனை அலைகள் சுருட்டிப் பந்தாடின. போராடிப் பார்த்தான். முடியவில்லை. பிரகாஷ் செவிகளில் அலைகளின் இரைச்சல். கண்களைக் கட்டிக் கடலில் யார் போட்டார்கள். ஒன்றும் தெரியவில்லை. கைகளை அசைத்தான். அவனது கைகளில் ஒன்றும் அகப்படவில்லை. மீண்டும் யாரோ தூக்கி யெறியும் உணர்வு. உயரத்தில் இருந்து விழுவது போலிருந்தது. குப்புறக் கிடந்தான். ஊஞ்சல் ஆட்டுவதுபோல் இருந்தது. நினைவை இழந்தான். கனவின் கற்பனையில் மிதந்தான். எவ்வளவு நேரம் அப்படி இருந்தான். அவனுக்குத் தெரியாது.

ஆழிப்பேரலைகள் விளையாடிப் போய்விட்டன. திருகோணமலைக் கடற் கரையோரம் சிதைந்து கிடந்தது. மீட்புப் பணிகள் நடந்தன. எங்கும் அழிவின் காட்சி. பலரைக் காணவில்லை. எங்கும் துயரம் பரந்தது. மக்கள் அகதிமுகாமில் தஞ்சமானார்கள். பிரகாஷ் கண்விழித்தான். அவன் புது உலகத்தில் இருந்தான். உடல் நொந்தது. தலை கனத்தது. பெரியதொரு பெட்டியின்மேல் இருப்பதை உணர்ந்தான். எப்படிப் பெட்டி வந்தது?. யார் என்னைப் பெட்டியின் மேல் வைத்தார்கள். ஒன்றும் புரியவில்லை. மெதுவாக எழுந்தான். சுற்றிவரப் பார்த்தான். மரங்கள் சரிந்து கிடந்தன. கட்டிடங்கள் அழிந்து கிடந்தன. கண்ணுக்கெட்டிய தூரம்வரை யாரும் இல்லை. அவனது கால்கள் நடந்தன. கால்கள் இடறின. முனங்கும் சத்தம் கேட்டது. சத்தம் வந்த பக்கம் நடந்தான். பெரிய மரம் சரிந்து கிடந்தது. கிளைகளில் இலைகள் இல்லை. அதன் கிளைகளுக்குள் ஒரு சிறுமி சிக்கியிருந்தாள்.

சிறுமி முனங்கினாள். அவளை மீட்கும் பணியில் ஈடுபட்டான். அவளது கண்கள் மூடியிருந்தன. மெதுவாக வெளியில் கொண்டு வந்தான். நிலம் ஈரமாக இருந்தது. முறிந்து கிடந்த தென்னோலைகளைக் கண்டான். அவற்றை ஒன்று சேர்த்தான். சிறுமியை ஓலைகள்மேல் கிடத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை உற்றுப் பார்த்தான். அவள் களைத்து வாடியிருந்தாள். தனது தங்கையை நினைந்தான். தங்கையின் சாயல் தெரிந்தது. ஆனால் அவள் தனது தங்கையில்லை. பிரகாஷ் களைத்திருந்தான். பசி வயிற்றைக் குடைந்தது. என்ன செய்வது. சூழலை அவதானித்தான். இடம் புதியதாகத் தெரிந்தது. அவனால் நிற்க முடியவில்லை. தென்னைகள் சரிந்து கிடந்தன. இளநீர்க் குலைகள் நிலத்தோடு உறவாடின. இளநீரைப் பிடுங்கினான். முறிந்த தடிகள் பரந்து கிடந்தன. கூரிய முனையுள்ள தடியை எடுத்தான். இளநீரின் குமிழ்ப் பக்கம் குத்தினான். பலமுறை முயன்றான். துவாரம் ஏற்பட்டது. இளநீர் பீறிட்டுப் பாய்ந்தது. அவனது முகத்தில் ஒரு பெருமிதம். கைகளில் இளநீர். குடிப்பதற்குக் குனிந்தான். சிறுமியை நினைத்தான். சிறுமியைத் தூக்கினான். நிமிர்த்தி இருக்க வைத்தான். சிறுமி விழித்துக் கொண்டாள். இளநீரைப் பருக்கினான். அவள் குடித்தாள். சிறிதளவு தானும் குடித்தான். விரலை துவாரத்துள் விட்டான். வழுக்கல் இருப்பதை உணர்ந்தான். வெட்டுவதற்குக் கத்தி இல்லை. தேவை ஏற்பட்டால் தேடல் பிறக்கும். தேடல் புதிய சாதனை படைக்கும். இளநீரை எடுத்தான். அடி மரத்தில் ஓங்கி அடித்தான். பலமுறை முயற்சித்தான்.

இளநீர் இரண்டாகப் பிளந்தது. உள்ள பலமெல்லாம் பிரயோகித்தான். பிரித்து எடுத்தான். விரல்களால் வழுக்கலை வெளியில் எடுத்தான். சிறுமிக்குக் கொடுத்தான். சிறுமிக்கும் பசி. அவள் மெதுவாக உண்டாள். அவனுக்குப் பசி தீரவில்லை. இளநீரைப் பிடுங்கினான். இரண்டு இளநீர்கள் தயார். ஒன்றைச் சிறுமியிடம் நீட்டினான். அவள் வாங்கிக் கொண்டாள். குடித்தார்கள். வழுக்கலை உண்டார்கள். புதுத்தென்பு பிறந்தது. ஆனாலும் மனம் கனத்தது. அழுகை தான் வந்தது. நான் எங்கிருக்கிறேன்? வீட்டில் அம்மா அப்பா என்னவானார்கள்? அண்ணா தம்பி தங்கை என்னவா னார்கள்? அழவேண்டும் போலிருந்தது. இருவர் கண்களில் இருந்தும் கண்ணீர். யாரை யார் தேற்றுவது?

"உங்கள் பெயரென்ன?." பிரகாஷ் கேட்டான். சிறுமி அதிசயமாகப் பார்த்தாள். அவளுக்கு விளங்கவில்லை. அவளே கேட்டாள். 'ஐயெ நம மொக்கக்த?" அவன் புரிந்து கொண்டான். பிரகாஷின் நண்பன் சாந்த.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சிங்கள மொழி பேசுபவன். அதனால் சிங்களம் கொஞ்சம் தெரியும். ஆனால் பேசுவதற்கு இயலாது. எனினும் பிரகாஷுக்கு விளங்கி விட்டது. பிரகாஷ் விடையளித்தான். ''மம இன்ன கொஹெத?'' சிறுமி அழுதாள். அழவேண்டாம் என்று சைகையால் கூறினான். மெதுவாக நடந்தார்கள். ''நங்கி நம மொனவத?'' தெரிந்த சிங்களத்தில் கேட்டான். ''மம சுமித்திரா''. பதிலளித்தாள்.

''அம்மே'' அலறினாள் சிறுமி. திடுக்குற்றான் பிரகாஷ். ஒரு சடலம் விறைத்துக் கிடந்தது. கண்களை மூடிய படியே விரைந்தார்கள். உயிருள்ள மனிதர்கள் கிடப்பார்கள். கண்களைத் திறந்து நடந்தார்கள். கடலுக்கு இவ்வளவு சக்தியா?. வியந்தார்கள். ''ஏய்'' மனிதக் குரல் கேட்டது. உயர மான மரத்திலிருந்து கேட்டது. அது பெரிய விசாலமான மரம். மேலே பார்த்தார்கள். மரம் சடைத்திருந்தது. பார்க்க முடியாதபடி இலைகள் மறைத்தன. உற்றுப் பார்த்தார்கள். அங்கே ஒரு சிறுவன் காணப்பட்டான். மரத்தில் ஏறி வருமாறு சைகை வந்தது. மரத்தில் கயிறுகள் தொங்கின. அதனை நோக்கிச் சென்றார்கள். முதலில் தயங்கினார்கள். பின் ஏறினார்கள். அவர்களுக்கு அதிசயம். பரண் அமைத்திருந்தான். அந்தச் சிறுவன் பேசிய மொழி புதியதாக இருந்தது. ஒன்றும் விளங்கவில்லை. ஓரிரு ஆங்கில வசனங்கள் பேசினான். பிரகாஷ் விளங்கிக் கொண்டான். அவன் பெயர் கலாம் என்றான். அவன் களைத்திருந்தான். கவலையில் மூழ்கியிருந்தான். ஆறாம் வகுப்புப் படிப்பதாகக் கூறினான். சிறுவர்களைக் கடத்துபவர்களிடம் இருந்து தப்பியவன். ஓடும்போது கடலலை அடித்துச் சுருட்டியது. இங்கு வந்து சேர்ந்ததாகக் கூறினான். பயத்தால் மரத்திலேயே தங்கியிருந்தான். வெவ்வேறு மொழி பேசினார்கள். சைகை மொழிதான் கைகொடுத்தது. இளநீரும் வழுக்கலும்தான் உணவாகியது. மக்களைக் காணவில்லை.

யாராவது நல்ல மனிதர்கள் வருவார்கள். வந்து காப்பாற்றுவார்கள் என நம்பினார்கள். இருள் வந்து கவ்விக் கொண்டது. இரவை மரத்தில் கழித்தார்கள். பொழுது புலர்ந்தது. கலாம் விழித்துக் கொண்டான். தூரத்தே ஆட்கள் நடமாடுவதை அவதானித்தான். பிரகாஷைத் தட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளை நேரே நீட்டினான். காட்டிய பக்கம் பிரகாஷின் கண்கள் திரும்பின. சில கட்டிடங்கள் தெரிந்தன. அவை ஆழிப்பேரலையினால் அழியவில்லை. வாகனங்கள் சில நின்றிருந்தன. கவனமாகப் பார்த்தார்கள். கட்டிடங்களில் என்ன இருக்கும்.? மனிதர்கள் இருப்பார்களா? பிரகாஷ் எட்டிப்பார்த்தான். சிறுவர்களின் அழுகை கேட்டது. பிரகாஷின் மனம் நடுங்கியது.

தூரத்தில் ஹெலி வந்திறங்கியது. அதிலிருந்து சிலர் இறங்கினார்கள். அவர்கள் முரடர்கள்போல் தெரிந்தார்கள். கட்டிடங்களை நோக்கி நடந்தார்கள். சிலர் சிறுவர்களைப் பிடித்திழுத்தார்கள். சிறுவர்கள் அடம் பிடித்து அழுதார்கள். அடிபோட்டு இழுத்தார்கள். ஹெலியில் ஏற்றினார்கள். ஹெலி விரைந்து எழுந்து பறந்தது. கலாமின் முகம் பயத்தால் இறுகியது. அவன் அவர்களின் பிடியில் இருந்து தப்பியவன். தனது அனுபவத்தை சைகையால் விளக்கினான். அவனது மொழியாலும் விளக்கினான். ஆங்கிலத்திலும் சொன்னான். சிறுமியின் விழிகள் பிதுங்கின. பயம் வேண்டாம் என்றான். மீண்டும் எட்டிப் பார்த்தார்கள். வாகனங்கள் சென்று மறைந்தன. மெதுவாகக் கீழிறங்கி வந்தார்கள். கட்டிடப் பக்கம் சென் றார்கள். கடல்நீர் பள்ளங்களில் தேங்கிக் கிடந்தது. கவனமாக நடந்தார்கள். ஒரு வீடு கண்ணில் பட்டது. சுற்றி வந்தார்கள். கதவு பூட்டியிருந்தது.

வீட்டின் பின்புறம் பார்த்தார்கள். ஒரு யன்னல் திறந்து கிடந்தது. எட்டிப் பார்த்தார்கள். சில சிறுவர்கள் காணப்பட்டார்கள். அவர்கள் அழுதபடியே கிடந்தனர். கலாம் வீட்டை ஒருமுறை நோட்டம் விட்டான். யாரும் அங்கிருக் கவில்லை. சமையல் கட்டுக்குள் போனான். சமைத்த உணவு தயாராக இருந்தது. உணவைக் கண்டதும் பசி எடுத்தது. கட்டுப்படுத்திக் கொண்டான். சுற்றி வரப் பார்த்தான். எவரையும் காணவில்லை. நன்றாக உறுதி செய்து கொண்டான். பிரகாஷ் யன்னல் பக்கம் வந்தான். “உஸ்...ஸ்ஸ்” என்று குரல் கொடுத்தான். சத்தம் வந்த பக்கம் முகங்கள் திரும்பின. கதவைத் திறக்கும்படி சொன்னான். கலாம் சைகை செய்தான். பிரகாஷ் சத்த மிட்டான். சிறுவர்களால் முடியவில்லை. அவர்கள் பயத்தால் நடுங்கி னார்கள். கதவை அவர்களால் திறக்க முடியவில்லை. சுமித்திரா மேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தாள். கைகளால் வழி கூறினாள். பிரகாஷ் கூரையில் ஏறினான். கலாம் உதவியாக இயங்கினான். சுமித்திரா காவல் கடமையில் இருந்தாள். இமைப் பொழுதில் ஓடுகள் கழற்றப்பட்டன. பிரகாஷ் விறுவிறு என்று உள்ளே இறங்கினான். சிறுவர்கள் அனைவரும் சந்தோசப் பட்டார்கள். அவர்கள் அனைவரும் பன்னிரெண்டு வயதையுடையவர்கள். இரண்டு சிறுமிகளும் இருந்தனர். கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந் தனர். இளம் வயதிலேயே கொடுமையை அனுபவித்தனர். அவர்களின் கட்டுக்களை அவிழ்த்தான். கயிற்றை எடுத்தான். அவற்றை முடிந்து நீளமாக்கினான். ஏணி உருவாகியது. சிறுமிகளை முதலில் ஏற்றிவிட்டான். கலாம் அவர்களைப் பத்திரமாக வெளியில் எடுத்தான். சிறுவர்கள் ஒவ்வொருவராக வெளியில் வந்தார்கள். பன்னிரெண்டு சிறுவர்களும் வெளியேறி விட்டார்கள். பிரகாஷ் இறுதியாக வெளியில் வந்தான். கூரையைப் பழையபடி மூடினான். "சரி சுணங்க வேண்டாம். விரைவாகப் போவோம்." கலாம் எச்சரித்தான். விறுவிறு என்று இறங்கினார்கள். அனைவரும் கலாமின் மரத்தடிக்குச் சென்றனர். இளநீர் உண்டார்கள். ஆழிப்பேரலைகளின் கொடுமைகள் சிறுவர்களைத் தாக்கவில்லை. ஆனால் அதைவிடவும் கொடுமையை அவர்கள் அனுபவித்தார்கள்.

பசி எடுத்தது. கலாம் மூளையில் மின்னலடித்தது. சமைத்த உணவு காட்சி யாகியது. கலாம் சிலரை அழைத்தான். உணவைப் பற்றிக் கூறினான். கலாம் முன்னோக்கி நடந்தான். அவன் பின்னே ஒரு பிரிவு சென்றது. நொடிப் பொழுதில் உணவு வந்தது. வயிறாற உண்டார்கள். சற்று நிம்மதி யாக இளைப்பாறினார்கள். ஆங்கிலம் பேசும் சிறுவர்கள் இருந்தார்கள். மலே மொழி பேசுபவர்கள் இருந்தார்கள். தமிழ் பேசுபவர்களும் இருந்தனர். சிங்களம் பேசுபவராக சுமித்திரா இருந்தாள். மூன்று சிறுமிகள். பன்னி ரெண்டு சிறுவர்கள். பதினைந்து சிறுவர்கள் ஒன்று சேர்ந்து விட்டார்கள். அனைவரும் ஒருதாய் மக்களாக விளங்கினார்கள். சுமித்திரா நான்காம் வகுப்புப் படிக்கிறாள். கலாம் ஆறாம் வகுப்பு. மற்றவர்கள் ஐந்தாம் வகுப்புப் படிப்பவர்கள். மரத்தைச் சுற்றி இருந்தார்கள். தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். எதிர்காலத் திட்டத்தை வரைந்தார்கள். அந்தமான் தீவில் இருப்பதைக் கலாம் கூறினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகாஷ் அதிசயித்துப் போனான். தாங்கள் இருக்கும் இடம் தெரிந்து விட்டது. எப்படி சொந்த ஊரினை அடைவது. சுமித்திரா கவலைப்பட்டாள். பதினைந்து சிறுவர்களும் பதினைந்து இடங்களைச் சேர்ந்தவர்கள். "போர்ட் பிளேயர் போகவேண்டும். அந்தமான் தீவின் தலைநகர் அதுதான். அங்கு மாமா இருக்கிறார். அவர் மூலம் நாம் நம்மூர் செல்லலாம். அவர் உதவி செய்வார். போவோமா"? கலாம் உற்சாகப் படுத்தினான். "எப்படிப் போவது"? யோசித்தார்கள். "எப்படியாவது போவோம். போவோமா"? தலையை ஆட்டினார்கள். எல்லோருக்கும் தாய்,தந்தையரைப் பார்க்கும் ஆசை. "எவ்வளவு தூரம் என்று தெரியாது. ஆனால் வழிதெரியும். சரி புறப்படுங்கள்." கலாம் வழி காட்டினான். நடந்தார்கள். காடுகள் ஊடாகப் போனார்கள். மலைகள் குறுக்கிட்டன. சிற்றாறுகள் வந்தன. ஆழிப் பேரலை கள் அழித்த இடங்கள் வந்தன. மக்கள் முகாம்களில் தத்தளித்தனர். பார்த்த படியே நடந்தார்கள். இவர்களது துயரை யாரும் கண்டுகொள்ளவில்லை. அகதிகளாக நடந்தார்கள். மாலையாகி விட்டது. களைத்து விட்டார்கள். பாடசாலையொன்று இடிந்து போய்க் கிடந்தது. அப்பால் கூடாரங்களில் அகதிகள்.

அந்தமுகாமில் தஞ்சமானார்கள். அந்த முகாம் பொறுப்பதிகாரி நல்லவராக இருந்தார். சிறுவர்களைப் பதிந்து முகாமில் இடங்கொடுத்தார். நாட்கள் உருண்டோடின. உடைகள் கிடைத்தன. வானொலிகள் செய்திகளைப் பரப்பின. புரியாத மொழியில் செய்திகள் வந்தன. பாதுகாப்பான இடம் கிடைத்தது. மனிதர்களைக் கண்டு கொண்டார்கள். அதில் ஒரு நிம்மதி கிடைத்தது. பழகிக் கதைப்பதற்கு நண்பர்கள் கிடைத்தார்கள். தெரிந்த மொழிகளைக் கலந்து பேசினார்கள். மொழி அவர்களைப் பிரிக்கவில்லை. ஆளுக்காள் துணையாக இருந்தார்கள். வீட்டுக் கவலைகள் எழும். அப்போது சேர்ந்து வருந்துவார்கள். சற்று நேரத்தில் வழமைக்குத் திரும்பி விடுவார்கள்.

ஒரு வாகனம் வந்து நின்றது. உன்னிப்பாகப் பார்த்தார்கள். சிலர் அதிலிருந்து இறங்கினார்கள். "ஹேய் .. மாமா....." கலாம் துள்ளினான். அவர்களை நோக்கி ஓடினான். அவன் தேடிய மாமா அவர்தான். "மாமா.. மாமா.." அழைத்தவண்ணம் ஓடினான். அவர் அவனை அடையாளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு கொண்டார். அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டான். அவன் அவரோடு உரையாடினான். அவனைக் கட்டித்தழுவி ஆறுதல் கூறினார். சிறுவர்களைக் காட்டி ஏதோ கூறினான். சிறுவர்களை அழைத்தார். விபரங்களைப் பதிந்தார். உதவுவதாக உறுதியளித்தார். சென்றுவிட்டார். தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. அதில் அழிவுச் செய்திகளைக் கண்டார்கள். ஸ்ரீலங்காவின் செய்தி இடையிடையே வரும். அம்பாந் தோட்டையின் அழிவைப் பார்ப்பார்கள். அப்போது சுமித்திரா அழுவாள். அவளை அனைவரும் சேர்ந்து தேற்றுவார்கள். திருகோணமலையின் அழிவைப் பாரப்பார்கள். பிரகாஷ் கண் கலங்குவான். நண்பர்கள் தேற்று வார்கள். மற்றவர்களது நாட்டின் செய்தி வரும். இவர்கள் சேர்ந்து தேற்று வார்கள். நாட்கள் உருண்டோடின.

கலாமின் மாமாவை எதிர்பார்த்து இருந்தனர். வாகனங்கள் வரும். போகும். ஆனால் கலாமின் மாமா வரவில்லை. கவலை வரும். ஒன்றாகச் சேர்ந்து அழுவார்கள். பின் ஒன்றாகி விளையாடுவார்கள். உணவு கிடைத்தது. தங்குமிடம் முகாமில் கிடைத்தது. மக்களோடு சேர்ந்து கொண்டார்கள். அவர்களுக்கு உதவினார்கள். சிரமதானம் செய்தார்கள். எல்லா வேலை களிலும் பங்கு பற்றினார்கள். முகாம் சுத்தமாக இருந்தது. வைத்திய அதிகாரிகள் சிறுவர்களைப் பாராட்டினார்கள். சிறுவர்களால்தான் முகாம் கலகலத்தது. முகாம் மக்கள் அன்பு செலுத்தினார்கள். சொந்த பந்தங்கள் நினைப்பே இல்லை. இதுதான் வாழ்க்கை என்ற நிலை வந்து விட்டது.

வாகனம் வந்து நின்றது. ஆர்வம் இருக்கவில்லை. வழமைபோல் பார்த்தி ருந்தனர். “ஹேய் கலாம்.” அழைப்போடு மாமா இறங்கினார். சிறுவர்களை அழைத்தார். சிறுவர்கள் துள்ளி ஓடினார்கள். அன்பாகப் பேசினார். தாமதத்துக்கு வருந்தினார். “இதோ உங்களுக்காக வண்டி வந்திருக்கிறது. ஏறுங்கள் போகலாம்” என்றார். முகாம் மக்கள் சிறுவர்களைப் பார்த்தார்கள். சிறுவர்களைப் பிரிவதற்கு மனமில்லை. மனம் வருந்தினார்கள். அவர்கள் கண்களிலே கண்ணீர். மாமா சிறுவர்களது நிலையை மக்களுக்கு விளக்கினார். சிறுவர்கள் விடைபெற்றார்கள். சிறுவர்களை வண்டி ஏற்றிக் கொண்டது. வாகனம் புறப்பட்டது. போட்பிளயர்ஸ் நகரம் சுனாமியால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோபையிழந்து கிடந்தது. வாகனம் பெரிய கட்டிடத்தில் தரித்தது. மாமா இறங்கினார். ஒரு கட்டிடத்துள் நுழைந்தார். கலண்டர் தெரிந்தது. 2005 செப்ரம்பர் மாதம் புரிந்தது. ஒன்பது மாதங்கள் பறந்து விட்டன. கண்களில் கண்ணீர் ஊற்றெடுத்தது. மாமா மீண்டும் வந்தார். சில அதிகாரிகளும் வந்தனர். ஒவ்வொரு பெயராக மாமா வாசித்தார். விபரங்களைக் கூறினார்.

ஸ்ரீலங்காவின் சுமித்திரா, பிரகாஷ் அழைக்கப்பட்டனர். விபரங்கள் அறிவிக்கப்பட்டன. அவர்களுக்கு அதிர்ச்சியான செய்திகள். ஆங்கிலத்தில் அறிவித்தார்கள். 'உங்கள் தாய் தந்தையர் உங்களுக்காக காத்திருக் கின்றார்கள். இன்று விமானம் மூலம் உங்கள் நாட்டுக்குச் செல்லலாம். ஏற்பாடுகள் செய்வதற்கு தாமதம் ஆகியது. உங்கள் தாய் தந்தையர் சுகமாக இருக்கிறார்கள். இரவு விமானம் புறப்படும்.' அதிகாரி அறிவித்தார். புறப்பட்டு விட்டார். சிறுவர்கள் சிரித்தார்கள். இன்றுதான் அவர்களுக்குச் சிரிப்பு வந்தது. ஆளையாள் அரவணைத்தார்கள். முகவரிகள் பரிமாறப் பட்டன. நன்றி ஆனந்தக் கண்ணீராக வந்தது. கலாமை மனதார வாழ்த்தி னார்கள். தங்களுக்குரிய விமானத்தில் ஏறினார்கள். கையசைத்து விடை பெற்றார்கள். விமானக் கதவு மூடிக் கொண்டது. மேலெழுந்து புறப்பட்டது.

"டேய் நானும் புதுநாடு காணுவேன்" பிரகாஷ் புன்னகைத்தான். சுமித்திரா கண்டு கொண்டாள். இந்த நாட்களுக்குள் கொஞ்சம் தமிழைப் பிடித்துக் கொண்டாள். "ஐயெ! என்ன சிரிப்பு". சுமித்திரா புன்னகையோடு வினவி னாள். அவன் இரண்டாயிரத்து நான்காம் ஆண்டு டிசம்பர் இருபத்தாறை நினைவூட்டினான். நண்பர்களோடு விளையாடிய கதையைக் கூறினான். சுமித்திராவும் சிரித்தாள். விமானம் பறந்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Trincomalee Public Library
023868



ISBN 955-1400-00-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org